# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜனவரி 2004 ஜீவியம் 9 மலர் 9**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம்* V | 2 |
| *லைப் டிவைன்* | 4 |
| *இம்மாதச் செய்தி* | 12 |
| *சாவித்ரி* | 13 |
| *எங்கள் குடும்பம்* | 15 |
| *அஜெண்டா* | 39 |
| *பிரம்மம், புருஷா, ஈஸ்வரா—மாயா, பிரகிருதி, சக்தி* | 41 |
| *அன்பர் கடிதம்* | 49 |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | 53 |
| *இதுவோ உம் ரௌத்திரக் கருணை* | 57 |

❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

**815) தேசத்தின் அகந்தையைப் போர் அழிக்கிறது.**

போருக்குப் போன நாடு தோற்றால் அதன் அகந்தை நேரடியாக அழிகிறது. ஜெயித்தால், ஏராளமான சேதம் வந்து ஜெயித்தது தெரியும். சேதத்தை மாற்ற எடுக்கும் முயற்சி, அகந்தையை அழிக்கும். ஜெயித்த நாடு பெரும்பாலும் தோற்ற நாட்டைவிடப் பண்பில் குறைவாக இருக்கும். அப்பொழுது தோற்ற நாட்டின் பண்பு ஜெயித்த நாட்டின் பண்பை வெல்லும். அது அகந்தையை அழிக்கும்.

❀❀❀

**816) நாலு பேர் எதிரில் தன் உண்மை நிலையை உணர்வு அறிவது வெட்கம் எனப்படும்.**

எவருமில்லாதபொழுது ஒரு காரியத்தைச் செய்ய வெட்கப்படுவது கூச்சமாகும், சொரணை என்போம். நாமே வெட்கப்படாத விஷயத்திற்கு, நாலு பேர் எதிரில் வெட்கப்படுவோம்.

❀❀❀

**817) ஆனந்தத்தை உடல் தலைகீழாக உணர்வது வலியாகும்.**

❀❀❀

**818) மனம் ஒரு நம்பிக்கையை இழந்து அடுத்ததைப் பெறுமுன் உள்ள நிலை குழப்பமாகும்.**

*மாறும் நம்பிக்கை குழப்பத்திற்கு வித்து.*

நம்பிக்கை என்பது ஒரு வீடு, கட்டடம்போல. ஒரு வீட்டைவிட்டு அடுத்த வீட்டுக்குப் போகும்பொழுது, ஒரே குழப்பத்தைக் காண்கிறோம். பொருள்கள் கலைந்துள்ளதுபோல், ஒரு நம்பிக்கையைவிட்டு அடுத்த நம்பிக்கைக்குப் போகும்பொழுது பழைய நம்பிக்கைக் கலைவதால் மனம் குழம்பும். நாட்டில் அரசு மாறும்பொழுது, குடும்பம் வேறு மதத்தைத் தழுவும்பொழுது, வேறு நாட்டில் போய் நாம் தங்கி அக்கலாச்சாரத்தை மனம் ஏற்கவேண்டிய நிலையில், பழைய நிலைகளைக் கைவிடவேண்டி வரும். அப்பொழுது பெருங் குழப்பம் எழும்.

❀❀❀

**819) நெடுநாள் உடலுணர்வை வெளிப்படுத்திய பழக்கம் உடலுணர்வாகும் (sensitivity).**

காலில் சேற்றை மிதித்துவிட்டால் உடனே கழுவவேண்டும் என்று அவசரப்படுகிறோம். ஒரு 10 நிமிஷம் தாமதமானால் மனம் சங்கடப்படுகிறது. இதனால் எந்த ஒரு நஷ்டமோ, கஷ்டமோ வரப்போவதில்லை என்றாலும் அரை நிமிஷம் தாமதிக்காமல் அதைச் சுத்தம் செய்ய உடல் அரிக்கும். அதை physical sensitivity உடல் உணர்வு எனலாம்.

❀❀❀

**820) ஒரு பகுதி மூலம் சக்தி force திறனாக power வெளிப்பட்டு செயல்திறனாகிறது skill.**

குழந்தைக்கு எழுதக் கற்றுக்கொடுத்தால் கை என்ற பகுதி சக்தியைப் பெறுகிறது. குழந்தை ஆர்வமாக எழுத ஆரம்பித்தால் சக்தி அதிகமாகிறது, எழுத வருகிறது. பலமுறை எழுதினால் நன்றாக எழுத skill முடிகிறது. கை என்ற பகுதி உடலிலுள்ள பொதுவான சக்தியை எழுதும் சக்தியாக மாற்றி, எழுத்துத் திறனாக்குகிறது. இது நாம் skill திறன் பெறும் வகை.

❀❀❀

*தொடரும்.....*

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

Page No.105
Para No.10

Pleasure, pain and indifference is a triple vibration.
It is superficial.
This is an arrangement of our evolution.
Our evolution is imperfect.
It can have no absoluteness.
It can have no necessity.
We are habit bound.
There is the habit of pain or pleasure.
We are obliged to this habit.
There is no real obligation about response.
A particular contact does not compel a particular response.

A particular habit gives pain or pleasure.
The recipient has that as a constant relation.
Such a contact is established.
It is done by nature.
We can give an opposite response to the habit.
We are capable of it.



## 12. ஆனந்தம் - விளக்கம்

சந்தோஷம், வலி, பராமுகம் ஆகியவை மூன்று உணர்வுகள்.

அவை மேலெழுந்தவாரியானவை.
இது நம் பரிணாமத்திற்குரிய ஏற்பாடு.
நம் பரிணாமம் குறையுடையது.
அதற்குப் பூரணமில்லை.
அதற்கு அவசியமில்லை.
நாம் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள்.
வலியோ, சந்தோஷமோ நமக்குப் பழக்கம்.
இப்பழக்கங்கள் நம்மை ஆட்கொள்ளும்.
நாம் அவ்வுணர்வை அனுபவிக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை.
ஒரு குறிப்பிட்ட செயலுக்கு ஒரு குறிப்பிட்ட உணர்வு என்ற நிர்ப்பந்தம் இல்லை.
ஒரு குறிப்பிட்ட செயல் வலியையோ, சந்தோஷத்தையோ தரலாம்.
அனுபவிப்பவருக்கு அது நிரந்தரமானது.
அத்தொடர்பு நிலையானது.
இது இயற்கைக்குரியது.
நாம் பழக்கத்திற்கு எதிரானதை உணரலாம்.
அது நம்மால் முடியும்.

We can feel pleasure where we used to have pain.
We can do the opposite too.
The Bliss-Self in us has inalienable delight.
It is its constant experience.
It is our true, vast Self.
Our superficial being feels pain or pleasure.
It responds with indifference too.
It is a mechanical reaction.
We can accustom this being to feel Delight.
This is a great conquest.
It is a deeper self-possession.
This self-possession is complete.
It is better than a glad detachment.
Our surface has the habitual reaction.
Detachment is acceptance without subjection.
It is a free acquiescence in imperfect values of experience.
This is a conversion of the imperfect into the perfect, false into true.
Mental being experiences dualities.
Spiritual delight replaces the dualities.

Page No.105
Para No.11

Reactions are pure habitual reality.
Pleasure and pain are such habits.
They are the things of the mind.
It is not difficult to perceive this truth.
There is the nervous being in us.
There is a fixedness in us.



நாம் வலிபட்ட இடத்தில் சந்தோஷம் அனுபவிக்க முடியும்.
நாம் எதிரானதையும் செய்யலாம்.
நம் ஆனந்த-ஆத்மாவுக்கு நீங்காத இன்பமுண்டு.
ஆனந்தம் அதன் மாறாத அனுபவம்.
அது நம் உண்மையான பரந்த ஆத்மா.
மேலெழுந்த நம் மனம் வலி, சந்தோஷத்தை அனுபவிக்கிறது.
அதனால் பராமுகமாகவுமிருக்க முடியும்.
இது இயல்பாக நடப்பது.
நம் ஜீவன் ஆனந்தமனுபவிப்பது நமக்குப் பழக்கமாகலாம்.
இது நடந்தால் பெரு வெற்றி.
இது ஆழ்ந்த சுய ஆட்சி.
இவ்வகையாகச் சுய ஆட்சி பூரணம் பெறுகிறது.
சந்தோஷமாக விலகியிருப்பதைவிட இது பெரியது.
நமது மேல் மனம் பழக்கத்திற்கு உட்பட்டது.
விலகியிருப்பது அடிமைப்படாமல் ஏற்பது.
குறையான அனுபவத்தை விரும்பி ஏற்பதாகும் அது.
நாம் சொல்வது குறையை நிறையாக்குவதாகும், பொய்யை மெய் ஆக்குவதாகும்.
மனம் இரட்டைகளை அறியும்.
ஆன்மீக ஆனந்தம் இரட்டைகளை உணர்வதை மாற்றவல்லது.

எரிச்சல் பழக்கத்தால் வருவது.
சந்தோஷமும், வலியும் அப்படிப்பட்டவை.
அவை மனத்திற்குரியவை.
இவ்வுண்மையை அறியமுடியும்.
நம்முள் உணர்ச்சி மண்டலம் உண்டு.
நம் பழக்கங்கள் உறுதியானவை.

**It is a false impression of absoluteness in these things.**

**The nervous being is accustomed to this falsehood.**

**There are pleasant things to the nervous being.**

**They are victory, success, honour, good fortune, etc.**

**To it, it is absolute.**

**They must produce joy as sugar is sweet.**

**There are unpleasant things to the nervous being.**

**They are unpleasant in themselves, absolutely.**

**They are defeat, failure, disappointment, disgrace, evil fortune.**

**They must produce grief as wormwood is bitter.**

**These are facts, normal to it.**

**To vary them is departure from fact, abnormal, morbid.**

**The nervous being is enslaved to habit.**

**It is a device of nature.**

**Nature desires constancy of reaction.**

**It desires sameness of experience.**

**It seeks a settled scheme of man's relations to life.**

**The mental being is free.**

**Nature has devised the mental being for variation.**

**Nature seeks flexibility through the mental being.**

**Mental being brings change and progress.**

**Its subjection is by choice.**

**It can choose to dwell in our mental habit.**

**For this it allows itself to be dominated by the nervous being.**

**The mental being is not bound to habits.**

**It need not grieve by defeat, disgrace, loss.**



**இவை மாறாதவை என நாம் தவறாக நினைக்கிறோம்.**

**நரம்பு மண்டலம் இப்பொய்யை நம்புகிறது.**

**உணர்வு இனிமையாக இரசிப்பவையுண்டு.**

**வெற்றி, ஜெயம், மரியாதை, அதிர்ஷ்டம் என்பவையுண்டு.**

**நமக்கு இவை முடிவானவை.**

**சர்க்கரை இனிப்பதுபோல் அவை சந்தோஷம் தரும்.**

**உணர்வை உறுத்துபவையுண்டு.**

**அவை உண்மையிலேயே உறுத்துபவை.**

**தோல்வி, நஷ்டம், ஏமாற்றம், அவமானம், தரித்திரம் போன்றவை அவை.**

**விளக்கெண்ணெய் கசப்பதைப்போல் அவை வருத்தம் தரும்.**

**இவை உண்மையென உணர்வு அறிகிறது.**

**இவையில்லை என்பது உண்மையைப் பொய் என்பதாகும்.**

**உணர்வு பழக்கத்தால் செயல்படுவது.**

**இது இயற்கையின் உபாயம்.**

**இயற்கைக்குப் பழக்கம் மாறக்கூடாது.**

**அனுபவம் அதேபோலிருப்பது அதற்கு அவசியம்.**

**வாழ்வு வழக்கத்திற்குரியது என்பது இயற்கையின் இயல்பு.**

**மனம் சுதந்திரமானது.**

**பல்வேறு அனுபவங்களைப் பெற இயற்கை மனத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**மனத்தின்மூலம் இயற்கை மாற்றங்களை நாடுகிறது.**

**மனம் மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் தரும்.**

**பழக்கத்தை ஏற்பது நம் இஷ்டம்.**

**ஒரு பழக்கத்தை மனம் முடிவாக ஏற்கலாம்.**

**அதற்காக மனம் உணர்வுக்கு அடிமையாகிறது.**

**மனம் பழக்கத்தை ஏற்கும் நிர்ப்பந்தமில்லை.**

**தோல்வி, அவமானம், நஷ்டம் அதற்குப் பொருட்டன்று.**

It can meet them with a perfect indifference.
It can do so with perfect gladness.
Man can refuse to be dominated by his nerves and body.
The more he refuses, the greater is his freedom.
He is now implicated in his vital, physical parts.
That makes him a slave to external touches.
Refusing to be so dominated, he becomes the master.
He becomes the master of his own responses.
He responds to the world's touches as he likes.

*Contd...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எல்லாம் இறைவன் செயலென நாம் அறிவோம். நமக்கு முக்கியமான விஷயங்களில், இறைவனிடம் செயலை ஒப்படைப்பதற்குப் பதிலாக, நாமே பெரிய பொறுப்பை ஏற்று பெரிய ஆர்வத்துடன் செயல்படுகிறோம். நம்மால் எதுவும் முடியவில்லை என்ற பின்னரேதான், ‘‘இனி நடப்பது நடக்கட்டும். எல்லாம் அவன் செயல்’’ என்போம். முடியாது என்றபொழுது “அவன் செயல்” என்று சொல்வதைப்போல், “எல்லாம் என்னால் முடியும்” என்றபொழுதும், “எல்லாம் அவன் செயல்’’ என்று அவனிடம் நம் பொறுப்பை ஒப்படைத்து, செயலில் ஆர்வம் காண்பிப்பதற்குப் பதிலாக, அவனிடம் காரியத்தை ஒப்படைக்க ஆர்வம் காண்பிப்பது நல்லது.

***முடியும் என்றாலும் அவன் செயல் எனில் அவன் செயல்படுவான்.***



அவற்றை மனம் அசையாமல் ஏற்கலாம்.
சந்தோஷமாகவும் ஏற்கலாம்.
உடலுக்கோ, உணர்வுக்கோ மனிதன் அடிமையில்லை.
மறுப்பிற்குரிய சுதந்திரம் உண்டு.
மனிதன் உடலாலும், உணர்வாலும் சிக்கலில் உள்ளான்.
அது மனிதனைப் புற உலகின் அடிமையாக்கும்.
புற ஸ்பர்சத்தை மறுத்தால் மனிதனுக்கு விடுதலையுண்டு.
தான் எதைச் செய்யவேண்டும் என்பதைத் தானே நிர்ணயிப்பான்.
தான் விரும்புமாறு உலகைச் சந்திக்கும் உரிமை அவனுக்குண்டு.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிலருக்கு ஒரு நல்லது செய்தவுடன் வாழ்வு நமக்குப் பல நல்லவற்றைச் செய்யும். வேறு சிலருக்குக் கெடுதல் செய்தால் வாழ்வு முன்போலவே தொடர்ந்து பல நல்லவற்றைச் செய்யும். நெருங்கியவர்களும், தூரத்து நண்பர்களும் இதற்கு உட்பட்டவர்கள். இதற்கு முடிவான கட்டம் நம்முள் உள்ளது. நம்மிடம் உள்ள சில நல்ல அம்சங்களுக்கு நல்லது செய்தாலும், சில கெட்ட அம்சங்களுக்குக் கெட்டதைச் செய்தாலும் உடனே பல நல்ல காரியங்கள் நடைபெறும்.

***நல்லதற்கும் கெட்டதற்கும் நல்ல பலனுண்டு.***

# இம்மாதச் செய்தி

## சுயநலம் சுடும்.

### ஜீவிய மணி

எழுந்திருக்கலாம், எட்டிப் பிடிக்கலாம் எனில்
எட்டியதைத் தாண்டிச் செல்லலாம்.





**p.42 Where, by the miser traffickers of sense.**
**கருமியான உணர்வின் கயவாளித்தனம்.**

- ✡ இருள் எனும் பூதத்தின் பாதங்களின் பாதுகாப்பு.
- ✡ மிருதுவான இருளின் மென்மையான அரவணைப்பின் தூக்கம்.
- ✡ விலைமதிக்கமுடியாத நாணயம் உலகைக் காக்கும்.
- ✡ அழியாத பரந்த ஜோதி அன்பனை நாடி வருவதை எதிர்பார்க்கும்.
- ✡ ஜோதியின் மின்னல் தோற்றமளிக்கக் காத்திருந்தான்.
- ✡ சூரிய ஜோதியின் ஒளிமயமான உருவங்களைக் காக்கவேண்டும்.
- ✡ ஆண்டவனின் விரயம் அற்புதமான அழிச்சாட்டம்.
- ✡ சிருஷ்டியின் அட்டகாசத்துள் திடீரெனக் குதித்தான்.
- ✡ அதல பாதாளத்துள் அமைந்த வாழ்வு.
- ✡ பாதாளத்தின் பாதகர்கள் பறித்துப்போன பொக்கிஷம்.
- ✡ அழியாத பொய்யின் அழகு நிறைந்த கவசம்.
- ✡ எண்ணம் ஆசையாகி தீண்டமுடியாத இடம்.
- ✡ அறியாமை வெள்ளத்தின் குருட்டுப் படுகுழிகள்.
- ✡ கண்டுகொண்ட மனிதன் கடவுளாவான்.
- ✡ பார்வையைக் கடந்த பர்வத உச்சியின் தரிசனம்.
- ✡ குரலழிந்து எழுந்த குணச்சிறப்பு.
- ✡ உயர்ந்த உண்மையின் ஆழ்ந்த அறிவிப்பு.
- ✡ இரவே பகலாகி, பகலே இரவாகும் இயற்கையின் அமைப்பு.
- ✡ உலகத்தின் பண்புகள் உயர்ந்து வாழ்வை உன்னதமாக்கும்.

- ✡ **பரந்த எண்ணமும், சிறந்த சொல்லும் நுழைந்த பாங்கு.**
- ✡ **மனித அறிவின் அமைதியான ஆராய்ச்சி.**
- ✡ **இரகஸ்ய உணர்வெழுந்து உற்று நோக்கியது.**
- ✡ **எங்கும் நிறை ஏகன் எட்டாத உயரத்தை எட்டிய நிலை.**

இயற்கையில் விரயமில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம். புயல் சேதம், பூகம்பம் அழிக்கும் நகரங்கள், உப்பான கடல் நீர், உபரியாக ஐஸ், நாம் அன்றாடம் காணும் ஆயிரம் விரயங்கள் நம் அறியாமையின் விளைவுகள். சிருஷ்டியில் அதிகத் திறமைவாய்ந்தது இயற்கை. மனிதன் ஒரு சமயத்தில் ஒரு காரியத்தைச் செய்வான். அதை முடிக்க அத்தனை காரியங்களையும் அவன் நிறுத்திவிடுவான்.

- ✡ **ஆயிரம் காரியங்களை ஒரே சமயத்தில் ஆரம்பித்து,**
- ✡ **ஆரவாரமாக அனைத்தையும் ஒரே சமயத்தில் பூர்த்திசெய்யும்,**
- ✡ **இயற்கையின் பாதை இருளாகவும், விரயமாகவும், இல்லாத பார்வைக்குப் புரிவது விரயம்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம், எண்ணம்; உணர்வு, நரம்பு; உடலுணர்வு, உடல்; ஆகியவை சேர்ந்து புறமனிதன் ஆகிறான். உள்மனம் விழிப்புற மனத்தில் எண்ணமற்று, அசைவற்ற உடலில் உடலுணர்வுகள் அற்றுப்போகவேண்டும்.



## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கெமிஸ்ட்ரி ஆசிரியை: எங்களுக்கு எல்லாமே புதியது. விவரமாகச் சொல்லுங்கள்.

தாயார் : என் தம்பிக்கு பூரி இஷ்டம் என்றால், அவன் என் வீட்டுக்கு வருந்தோறும் தற்செயலாய் பூரி செய்திருப்பேன். பூரி செய்யும்பொழுதெல்லாம் அவன் வரமாட்டான். அவன் வரும்பொழுது பூரி டிபனிருக்கும் என்றால், நான் ஒருமுறை தம்பி வரவேண்டும் என்று விரும்பும்பொழுது, பூரி செய்தால் வருவான்.

பூகோள ஆசிரியை : இது என்ன சட்டம்?

தாயார் : விஷயங்களுக்குள் தொடர்புண்டு. நாம் அதைக் காண்பதில்லை. தொடர்பு தற்செயலானதாகவோ, தவிர்க்கமுடியாத தொடர்பாகவோ இருக்கும். அதைக் கண்டுகொண்டால், அத்தொடர்புமூலம் அச்செயலை நிகழ்த்தலாம். அதுவே Life Response. Pride & Prejudice என்ற கதை உங்களுக்கெல்லாம் தெரியும். அதில் எலிசபெத் பெம்பர்லியில் மனம் மாறியவுடன், மறுநாள் வரவேண்டிய டார்சி, அன்றே வருகிறான்.

வரலாற்று ஆசிரியை : அவள் மனம் வெறுப்பானபொழுது அவன் அங்கில்லை. வெறுப்பு விருப்பானபொழுது, அம்மாற்றம் அவனை வரவழைக்கிறது. இதை நாம் எப்படிப் பயன்படுத்தலாம்?

தாயார் : மாமியார் கடுமையாக இருக்கிறார் எனில் நம் மனம் அவர்மீது கடுமையாக இருக்கிறது எனப் பொருள். நம் மனம் கனிவாக மாறினால் மாமியார் கனிவாக இருப்பார்.

வரலாற்று ஆசிரியை : நம்பமுடியவில்லையே.

பௌதீக ஆசிரியை : நமக்குத் தெரிந்தே நடந்திருக்கிறதே. திருமணம் ஆனவுடன் பெண்ணிடம் பக்கத்து வீட்டுப் பெண், "உன் மாமியாருக்கு உன்மீது துவேஷம்'' என்றாள். பெண்ணின் மனம் கசந்துவிட்டது. ஓராண்டு மாமியார் கடுமையாக இருந்தாள். அடுத்த ஆண்டு வேறொருவர்மூலம் தாம் கேட்டது அக்கப்போர் என அறிந்த அன்றே மாமியார் இனிமையாகப் பழகினார். இது எங்களுக்குப் புரியவில்லை. இந்தச் சட்டம் கேள்விப்பட்டவுடன் விளங்குகிறது.

கணவரும், பிள்ளைகளும் வந்து கலந்துகொண்டனர். பார்ட்னரும் உடன்வந்திருந்தார்.

தாயார் : அன்னையின் கோட்பாடுகள் ஏராளம். அவற்றை அறிந்து பின்பற்றுதல் பலன் தரும்.

பௌதீக ஆசிரியை : அன்னை கான்சரைக் குணப்படுத்தினார் எனக் கேள்விப்பட்டோம்.

தாயார் : உண்மை.

வரலாற்று ஆசிரியை : என்ன செய்தால் குணமாகும்?

தாயார் : நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தால் குணமாகும்.

கெமிஸ்ட்ரி ஆசிரியை: அன்னையிடம் பலிக்காத பிரார்த்தனையுண்டா?

தாயார் : இல்லை.

வரலாற்று ஆசிரியை : என் தங்கை கணவர் அவளைவிட்டுப் போய்விட்டார். பிரார்த்தனையால் திரும்பி வருவாரா?



தாயார் : தவறு கணவர்மீது மட்டுமிருந்தால் பிரார்த்தனை உடனே பலிக்கும். தவறு உங்கள் தங்கைமீதுமிருந்தால், அதைச் சரிசெய்தால் பிரார்த்தனை இல்லாமலே கணவர் திரும்பிவருவார்.

வரலாற்று ஆசிரியை : இப்படி நடந்திருக்கிறதா?

தாயார் : தினமும் பல விஷயங்கள் இப்படி நடக்கின்றன.

கெமிஸ்ட்ரி ஆசிரியை: சமர்ப்பணம் எப்படிச் செய்வது?

தாயார் : அன்னையிடம் கூறுவது சமர்ப்பணம். நமக்காகச் செய்வதை அன்னைக்காகச் செய்வது சமர்ப்பணம்.

பிரின்ஸ்பால்: எதற்காகச் சமர்ப்பணம் செய்வது?

தாயார் : பொதுவாகப் பிரச்சினை தீர, சமர்ப்பணம் செய்கிறோம்.

வரலாற்று ஆசிரியை : வேறெதற்காகச் சமர்ப்பணம் செய்யலாம்?

தாயார் : வந்த வாய்ப்புகள் பலிக்க, சமர்ப்பணம் உதவும். இதுவரை வாராத வாய்ப்புகள் வரும்.

பிரின்ஸ்பால் : எல்லோரும் சமர்ப்பணம் செய்ய ஆரம்பித்தால், நாடே மாறிவிடுமே.

தாயார் : ஆமாம். என் தகப்பனார் காலத்தில் எங்களூரில் பட்டம் பெற்றவர் அவர் ஒருவரே. இன்று அதே ஊரில் எல்லா வீடுகளிலும் பட்டதாரியுண்டு. அது முன்னேற்றம்.

தத்துவ ஆசிரியை : சமர்ப்பணத்திற்கு நீங்கள் சொல்லும் பலனிருந்தால், எல்லோரும் எளிமையாகச் செய்யும்படியிருக்காது.

தாயார் : அன்னை அன்பர்கள் தவிர இதரர்கள் சமர்ப்பணத்தை நம்பமாட்டார்கள். அன்பர்கட்கே சமர்ப்பணம் எப்பொழுதும் நினைவு வாராது. நினைவு வந்தாலும் சமர்ப்பணம் பல கட்டங்களில் உள்ளது.

தத்துவ ஆசிரியை : நான் நினைத்தேன். அவற்றை விவரமாகச் சொல்லுங்கள்.

தாயார் : **1) பிரச்சினை தீர வாயால் "நான் சமர்ப்பணம் செய்கிறேன்" என்றாலும், அன்னையிடம் கூறிக்கொண்டே இருந்தாலும் எந்தப் பிரச்சினையும் முழுவதும் தீரும்.**

**2) மனதால் கூறினால் உடனே பூரணமாகத் தீரும். பெரிய பிரச்சினைகளும் தீரும்.**

**3) உணர்வு பேசினால் அசையாதது அசையும், நடக்காதது நடக்கும்.**

**4) உடல் விழித்து சமர்ப்பணம் செய்தால், உலகில் எந்தச் சிக்கலும் அவிழும்.**

தத்துவ ஆசிரியை : இதைச் செய்வதில் கடினம் எது?

தாயார் : நாம் மனதால் சமர்ப்பணம் செய்ய முயலும்பொழுது வாய் நம்மை மீறிப் பேசும்.

தத்துவ ஆசிரியை : Concentration வேணும் போலிருக்கிறது.

தாயார் : சமர்ப்பணத்தை consecration என்கிறோம். அதற்கு concentration தேவை.

தத்துவ ஆசிரியை : பலன் concentrationஐப் பொருத்ததா?



தாயார் : ஆம். மேலும் சமர்ப்பணம் முற்றி சரணாகதியாகிறது. அத்துடன் மனம், உணர்ச்சி, உடல் என்பவற்றுள், மேற்பகுதி, கீழ்ப்பகுதி என இரண்டுண்டு. ஆழத்தைப் பொருத்துப் பலன். போனில் பேசுவதைச் சமர்ப்பணம் செய்யலாம் எனில், சமர்ப்பணம் செய்யுமுன் கை டயல் செய்யும். வாய் பேசும்.

தத்துவ ஆசிரியை : நம் மனம் நம் கட்டுப்பாட்டிலிருக்காது என்கிறீர்களா?

தாயார் : நம் மனம், உணர்வு, உடல் ஆகியவை உலகம். இவை கட்டுப்பட்டால், உலகம் நமக்குக் கட்டுப்படும்.

வரலாற்று ஆசிரியை : அப்படியானால், இவை நமக்கில்லையா?

தாயார் : போன், T.V., car, வீடு, ஏற்கனவே நமக்கில்லை என இருந்தது. இப்பொழுது அனைவருக்கும் வந்ததுபோல் நமக்கும் சமர்ப்பணம் உண்டு.

பிரின்சிபால் : அப்படி மாறக் காரணம்?

தாயார் : 1956இல் வந்த சத்திய ஜீவியம் நாளாக, நாளாக நம் வாழ்வில் ஆழ்ந்து செயல்படுவதால், இதுவரை நமக்கில்லாத சமர்ப்பணம், இன்று நமக்குண்டு. சமர்ப்பணம், இந்த யோகத்திற்கு உயிர் நாடி; சரணாகதி, ஜீவநாடி. என்னால் இவற்றை ஓரளவுக்கு மேல் பயன்படுத்த முடியவில்லை.

கணவர் : எங்கள் வாழ்வு கடைசி கட்டத்திலிருந்தது. எங்கள் வீட்டில் என் மனைவி மட்டுமே பக்தை. இன்று வாழ்வு அளவுகடந்து உயர்ந்துள்ளது. அதற்கெல்லாம் இவளுடைய சமர்ப்பணமே காரணம்.

பார்ட்னர் : நாம் சமர்ப்பணம் செய்வது நம் செயலை.

தாயார் : சொல், உணர்ச்சி, செயல் ஆகியவற்றைப் படிப்படியாகச் சமர்ப்பணம் செய்கிறோம். முடிவாக நாம் நம்மையே சமர்ப்பணம் செய்கிறோம்.

பிரின்சிபால் : சொல், உணர்ச்சி, செயல் அடுக்கடுக்கானவை. நம்மையே சமர்ப்பணம் செய்வது எப்படி?

தாயார் : நாம் பேசுவதற்குப் பதிலாக அன்னையைப் பேசச் சொல்வது சொல்லைச் சமர்ப்பணம் செய்வதாகும். நாம் உணர்வதற்குப் பதிலாக அன்னையைச் உணரச் சொல்வது உணர்வைச் சமர்ப்பணம் செய்வது. நாம் செயல்படுவதற்குப் பதிலாக அன்னையைச் செயல்படச் சொல்வது செயலைச் சமர்ப்பணம் செய்வதாகும். நாமிருக்கிறோம், வாழ்கிறோம். அதற்குப் பதிலாக அன்னையை வாழச்சொல்வதும், இருக்கச் சொல்வதும் நம்மைச் சமர்ப்பணம் செய்வதாகும்.

பார்ட்னர் : சொல், செயல் புரிவதுபோல் வாழ்வு, இருப்பது புரியவில்லை.

தாயார் : சொல்லையும், செயலையும் சிந்தித்துச் செய்கிறோம். சிந்திக்காமல் செயல்படவேண்டிய பெரிய நேரங்களுண்டு. அந்த நேரம் 'நாம்' செயல்படுகிறோம். க்ஷணத்தில் முடிவெடுக்கிறோம். அங்கு நம்மை விலக்கி அன்னையை வைப்பது பூரணச் சமர்ப்பணம். அந்நிலையில் சமர்ப்பணம் சரணாகதியாகிறது.

பிரின்சிபால் : நாம் என்று ஒன்று இருக்க அவசியமில்லை.

தாயார் : அதுவே கரு. எண்ணம் என எழுமுன் சமர்ப்பணமும் எழுந்தால் சமர்ப்பணம் பூரண சமர்ப்பணமாகும். பூரண சமர்ப்பணம் சரணாகதி. வாழ்வில் அது அதிர்ஷ்டம். யோகத்தில் அதுவே சித்தியாகும்.



பார்ட்னர் : நம் பிள்ளை, நம் நண்பர், தகப்பனார் குறைகள் நம் கண்ணில் படுவதில்லை. அதற்கும் சமர்ப்பணத்திற்கும் தொடர்புண்டா?

தாயார் : அது பாசத்தால் நடப்பது. அதையே பக்தியால் செய்வது சமர்ப்பணம்.

பிரின்சிபால் : எளிமையாகப் புரிகிறது.

தத்துவ ஆசிரியை : எளிமையாகப் புரிவதால், செய்வது கடினம்.

தாயார் : செய்ய நினைவே வாராது. நினைவு வந்தாலும், சமர்ப்பணத்தைவிட சுபாவம் அதிவேகமாகச் செயல்படும்.

பிரின்சிபால் : உணர்ச்சி வசப்பட்டவனுக்கு அறிவு என்றொன்றிருப்பது தெரியாததுபோல் நமக்கு யோகமிருப்பது தெரியவில்லை.

தாயார் : சரி.

தத்துவ ஆசிரியை : தெரிய நாளாகும். செய்ய யுகமாகும். தெரிய அறிவு வேண்டும். செய்ய ஆத்ம விழிப்பு வேண்டும்.

தாயார் : வளரும் ஆன்ம விழிப்புத் தேவை.

பெண் : சாதாரண மொழியில் சொல்லக்கூடாதா?

தாயார் : நாம் நாமாக இருப்பதை வேரோடு சுவைத்து வாழ்கிறோம். ஆண்டவனாகும் நேரம் வந்தது தெரியவில்லை. தெரிந்தபின்னும் நம் வாழ்வின் சுவை நம்மை ஆக்ரமித்துக்கொள்கிறது. பகவான் அதை Taste of Ignorance, அஞ்ஞானம் ருசிக்கிறது என்கிறார்.

பெண் : சுபாவம் மாறாது என்பது இதுவா?

பிரின்சிபால் : சுபாவம் மாறும் நேரம் வந்துவிட்டது. அது மாறும் என்றாலும், நாம் சுபாவம் மாறச் சம்மதிக்கமாட்டோம் என்கிறார் உன் அம்மா.

தத்துவ ஆசிரியை : கீதை, "**நீ எதையும் சாதிக்கலாம்**" என்பது இதுவா?

தாயார் : ஆம். ஒரு முறை நம்மை அன்னை கையில் ஒப்படைத்தால் நிகழும் அற்புதம் எல்லாவற்றையும் தெளிவுபடுத்தும்.

பிரின்சிபால் : அதை எப்படிச் செய்வது?

தாயார் : நம்மால் சமர்ப்பணத்தை முழுவதும் ஏற்கமுடியவில்லை என்பதால், ஏதாவது ஒரு காரியத்தில் அதை ஏற்பது பலன் தரும், அன்னையை நமக்கு விளக்கும்.

பார்ட்னர் : நான் செய்யமுடியுமா?

தாயார் : கம்பெனியில் ஒரு வேலையில் சமர்ப்பணத்தைப் பின்பற்றலாம்.

ஒரு ஆசிரியை : என்ன பலன் தரும்?

தாயார் : பெரும் பலனிருக்கும்.

ஆசிரியை : நான் சம்பளத்திற்காக வேலை செய்கிறேன். எனக்கு என்ன பலன் வரமுடியும்?

தாயார் : பல உதாரணங்களைக் கூறலாம். வேண்டுமானால் சொல்கிறேன்.



பிரின்சிபால் : அன்னை சொல்வதை ஏற்கிறேன். உதாரணம் தேவையில்லை. என் பிரமோஷனைப் பார்த்தபின் நான் எதையும் நம்பத் தயாராக இருக்கிறேன்.

தாயார் : சமர்ப்பணத்தால் எதையும் சாதிக்கலாம் எனில் அது இன்று நமக்கில்லாத சக்தி, உலகில் இல்லாத ஒன்று. அது இன்று நமக்கும் உண்டு என்றால் அதற்குரிய பக்குவம், தீவிரம், பக்தி நமக்கவசியம். நம் பங்கு அதுவே. நாம் ஒரு காரியம் செய்யவேண்டுமானால் உடனே செய்கிறோம். போனில் பேசவேண்டுமானால் பேசுகிறோம். அது நம் செயல். இச்செயலுக்கு அந்த சக்தியில்லை. நம் செயலை, தெய்வச் செயலாக்குவது எப்படி? நம் வீட்டில் திருடு போனால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை எனில் போலீஸைக் கூப்பிடுகிறோம். அது நம்மால் முடியாததை சமூகத்தின் திறமையால் முடிப்பது. போலீஸ் அதன் சட்டப்படிச் செயல்படுமே தவிர நம் இஷ்டப்படிச் செயல்படாது. திருடு போன பொருளை வீட்டில் உள்ளவர் திருடியிருந்தால், நாம் 'கூடாது' என்றாலும், போலீஸ் விடாது. போலீஸ் வீட்டில் உள்ள மனிதரிடமிருந்து திருட்டுப் பொருளை மீட்டால், நமக்குப் பொருள் கிடைத்ததைவிட மானம் போனது குறையாகும். நம்மைவிட உயர்ந்த சக்தி,

- **நம்மால் முடியாததைச் சாதிக்கும்.**
- **நமக்குப் பிடிக்காத வகையிலும் செயல்படும்.**
- **எதுவும் நம் நன்மைக்கே அமையும்.**

அதை மனம் ஏற்பதும், இனிமையாக ஏற்பதும் சமர்ப்பணம், சரணாகதியாக உதவும். போனில் பேசுவது நம் செயல். போனில் பேச எண்ணம் எழுந்தவுடன் அந்த எண்ணத்தை மறுத்து, சமர்ப்பணம் செய்தால்,

சமர்ப்பணத்தின் தீவிரத்தைப் பொருத்துப் பலனிருக்கும். பல நிலைப் பலன்கள்,

1) யாரிடம் பேச விரும்பினோமோ, அவர் அதே நேரம் நம் வீட்டிலிருப்பார்.
2) ஓர் ஆபத்தான விஷயத்தில் சீப் இன்ஜினீயர் உதவியை நாடி எக்ஸிகுயூடிவ் இன்ஜினீயரைக் கூப்பிட்டால், எக்ஸிகுயூடிவ் இன்ஜினீயருடன் சீப் இன்ஜினீயர் பேசிக்கொண்டிருப்பார்.
3) பத்திரிகைச் சந்தாவை பத்திரிகை ஆசிரியரிடம் கொடுப்பதைச் சமர்ப்பணம் செய்தால், பத்திரிகை ஆசிரியருடன் அகில இந்திய பாங்க் தலைவர் இருப்பார். அவரை அறிமுகம் செய்தால், 'இல்லை' என்ற பாங்க் லோன் 'உண்டு' என்றாகும்.
4) தரிசனத்திற்குப் போவதைச் சமர்ப்பணம் செய்தால், தரிசனத்தன்று சட்டம் மாறி, வாழ்வு முடிந்துவிட்டது என்ற நிலையில் புது வாழ்வு வரும்.
5) இறைவன் செயல் இதமானது என்பதை இதயம் ஏற்குமா என்பதே பிரச்சினை.
6) 4 இலட்சம் ஆர்டர் பெறாதவர்க்கு 4 கோடி ஆர்டருக்குரிய வாய்ப்பு எழும்.

வரலாற்று ஆசிரியை : சேவைக்குள்ள பலனைவிடச் சமர்ப்பணத்திற்குப் பலனுண்டா?

தாயார் : சேவை உடலுழைப்பு, சமர்ப்பணம் ஆத்மாவின் அசைவு.

பிரின்சிபால் : என் மகன் தொழில் செய்கிறான். அவன் செய்யக்கூடிய சேவையுண்டா?

தாயார் : அனைவரும் செய்யக்கூடியது புத்தகச் சேவை. அதன்மூலம் ஒருவர் தொழில் 1 கோடியிலிருந்து 3 கோடியாயிற்று. அவரை 1000 புத்தகம் விற்கச் சொல்லுங்கள். பிரச்சினை பிரார்த்தனை செய்தால் பலிக்கும். வாய்ப்பைப் பெற பெரிய மனம் தேவை.



எல்லோரும் கலைந்தபின் வீட்டார் கலந்து பேசினர். சிறியவன், "அம்மா, நீங்களே எனக்கும் சேர்த்து சமர்ப்பணம் செய்யுங்கள்" என்றான். பெரியவன், சிறியவனைக் கிண்டலாகப் பார்த்து சிரித்துவிட்டுப் போய்விட்டான். கணவர் நெகிழ்ந்து போயிருந்தார். பெண்ணுக்கு அன்னைமீது யோசனை எழ ஆரம்பித்துவிட்டது. தாயார் அனைவரையும் கவனித்தார். பேசாமலிருந்தார்.

பெண் : அண்ணா இதுபோல் பொறுப்பில்லாமலிருக்கிறாரே, நீங்கள் ஏன் ஒன்றும் சொல்வதில்லை?

தாயார் : அதற்குப் பல வகைகளில் பதில் சொல்லலாம்.

1) நான் பொறுப்பில்லாததால், என் மகன் பொறுப்பற்றிருக்கிறான்.
2) நான் பொறுப்போடு இருப்பதால், அவன் எதிராக இருக்கிறான்.
3) பொறுப்பற்றவனுக்குப் பொறுப்பேற்படுத்தும் பொறுமையை நான் பெறவேண்டுமென வந்து இருக்கிறான்.
4) பொறுப்பில்லாதவனுக்கு அதிர்ஷ்டம் வந்தால், சாதாரண அன்பருக்கு அன்னை வந்ததுபோல் என நான் அனுபவப்படவும் இருக்கலாம்.
5) பொறுப்பில்லாமலிருக்கப் பெருமைப்படும் மகன், எனக்கு வர நான் அன்னையை முழுவதும் ஏற்காததைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கலாம்.

தாயார் : அண்ணா திருந்தி, பாக்டரியை வெற்றிகரமாக்க வேண்டுமன்றோ?

தாயார் : என்னால் தனியாக முடியும்வரை செய்கிறேன். வீட்டார் அனைவரும் செய்தால் பெரும் பலனிருக்கும்.

பெண் : நான் உங்களுடன் சேர்ந்து செயல்படுகிறேன்

தாயார் : உனக்குப் படிப்பில் பொறுப்பிருக்கிறது போதுமா? இதுவரை நீ III classஇல் பாஸ் செய்திருக்கிறாய். உன்னால் II classஉம் வாங்க முடியும். I classஉம் முடியும். நீ அந்த முடிவை எடுத்துச் சாதித்தால் அண்ணாவிடம் மாறுதல் தெரியும்.

பெண் : எனக்குப் படிக்க ஆசையெனில், M.A. படிக்க ஆசை. வகுப்பில் முதலாக வரவேண்டும் என்றும் நான் நினைத்ததில்லை.

தாயார் : நாம் அலட்சியமாக இருக்கிறோம். அன்னை செயல்பட நம் செயலில் நம் முயற்சியை முடிக்க வேண்டும்.

பெண் : சரி. நான் அதைச் செய்கிறேன். இதோ அண்ணாவே வருகிறார்.

பெரியவன்: அம்மா, என் வேலைக்கு Mother's Blessings வேண்டும். எனக்குக் கணக்கே வாராது. கம்பெனியில் கணக்குச் சரியில்லையாம். நான் அதை எடுத்துச் சீர் செய்கிறேன் என்றால், எனக்குக் கணக்கு வாராது என்று தெரியுமாதலால் அனைவரும் கேலி செய்கிறார்கள்.

தாயார் : எடுத்துச் செய். அன்னைக்குப் பிரார்த்தனை செய்.

பெண் : உங்களுக்கு அன்னை மீது நம்பிக்கையிருந்தால் தானே கணக்கு நேராகும்.

பெரியவன் போனபின், பெண் தன் முடிவிற்கும் அண்ணன் முடிவிற்கும் உள்ள தொடர்பைத் தாயாரிடம் சுட்டிக்காட்டினாள்.



தாயார் : வெளியுலகுக்கு அன்னையைத் தெரியாது. நமக்கு ஏராளமாகத் தெரியும். நம்மால் தெரிந்ததில் ஒரு துளியும் பின்பற்ற முடியவில்லை. அன்னை பாவ, புண்ணியத்திலிருந்து நம்மை மீட்டுவிட்டார் என்றாலும், நாம் அன்னையை அறியாமல், பலனை மட்டும் கருதுகிறோம்.

பெண் : பாவ, புண்ணியத்திலிருந்து மீட்பது என்றால் என்ன?

தாயார் : நீ சிறு பெண். யாராவது பெரியவர்கட்குச் சொல்லும்பொழுது நீயும் கேட்டுக்கொள். உனக்கே எப்படிச் சொல்வது?

அந்நேரம் அவ்வூர் தியான மையம் நடத்தும் தம்பதிகள் வந்தனர். அவர் வக்கீல். அவர் மனைவி பேங்க் ஏஜெண்ட். இதே விஷயத்தை எடுத்தனர். பெண் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டாள்.

வக்கீல் : பாவம் என்பது செய்யும் மனநிலையைப் பொருத்தது என்கிறார் அன்னை. சரி, பாவமேயில்லை எனவும் கூறுகிறார். புரிவது போலிருக்கிறது. மேற்கொண்டு விளக்கம் தேவை.

ஏஜெண்ட் : அம்மா, நீங்கள் அதிகம் படித்தவர். அத்துடன் நுணுக்கமாக யோசனை செய்கிறீர்கள். நாங்களிருவரும் 2 நாளாக இதைப் பேசுகிறோம். பேசும்பொழுது புரிவது போலிருக்கிறது. பிறகு செய்யும்பொழுது குழப்பம் வருகிறது.

தாயார் : இது சம்பந்தமாக அன்னை கூறியவற்றையும், அதை நாம் புரிந்துகொள்ள வேண்டிய வகைகளையும் கூறுகிறேன்.

- **பாவம் என்பது சிருஷ்டிக்கப்படவில்லை.**
- **பாவ, புண்ணியம் என்பன இரட்டை மனத்தின் செயலுக்குரியது.**

- ✴ **மனத்தைக் கடந்தால் செயல் உண்டு, பாவமோ, புண்ணியமோ இல்லை.**
- ✴ **செயல் செய்வதின் மனநிலைக்குப் பாவம் உண்டு.**
- ✴ **மனத்தைவிட, பாவம் அகந்தைக்குண்டு.**
- ✴ **அகந்தையில்லாதவர்க்குப் பாவமில்லை.**
- ✴ **பஞ்சமா பாதகங்களும் அகந்தையுள்ளவரையே. அதில்லாவிட்டால் பாவமில்லை.**
- ✴ **மேல்மனம், மனம், காலம், அகந்தைக்குப் பாவம் உண்டு.**
- ✴ **புலி மானைக் கொல்வது பாவமில்லை. மான் தன்னைச் சாப்பிடும் புலி மீது அன்புகொள்கிறது.**
- ✴ **குழந்தை எட்டி உதைப்பது பாவமில்லை. பெற்றோர் காலை முத்தமிடுவர். குழந்தைக்கு அகந்தையில்லை.**
- ✴ **நாம் சித்தப்பாப் பெண்ணைக் கட்டிக்கொள்வது பாவம். இங்கிலாந்தில் அத்தை மகளைக் கட்டிக்கொள்வது பாவம். பாவம் பண்பைப் பொருத்தது.**
- ✴ **சர்ச்சில் கார்டினல்களுக்கு இது தெரியும். பாமர மக்களுக்காக நரகம், பாவம் என்று கூறுகிறார்கள்.**
- ✴ **அசைவனும் வெள்ளிக்கிழமை மாமிசம் சாப்பிடமாட்டான். மறதியாகச் சாப்பிட்டால் பாவம் என வருத்தப்படுவான். வருத்தம் நினைவுக்கே, செயலுக்கில்லை.**

வக்கீல் : விளக்கமே தேவையில்லை. தெளிவாக இருக்கிறது.

ஏஜெண்ட் : மேலும் சொல்லுங்கள்.

தாயார் : மனத்தை விட்டகன்று செயல்பட்டவர் இதை உணர்ச்சிபூர்வமாக அறிவார்.

வக்கீல் : மனத்தைவிட்டு எப்படி அகல்வது?



தாயார் : நம் மகன் செய்த தவறு நமக்குத் தவறில்லை. அது பாசம். பாசத்தை விட்டகன்று சிந்தனை செய்தால் மகன் செய்தது தவறு எனத் தெரியும். அடுத்த கட்டத்தில் மனத்தைவிட்டு அகலவேண்டும்.

பெண் : ஏதாவது கடந்த நிகழ்ச்சிமூலம் விளக்க முடியுமா?

தாயார் : மகன் போதை மருந்தைத் தகப்பனார் திருடினால் அது திருடாகுமா?

பெண் : நல்ல காரியமன்றோ! ஆமாம். இங்கு பாவம் புண்ணியமாகிறது.

ஏஜெண்ட் : மேலும் விபரம் உண்டா?

தாயார் : உண்டு. மேல்நாட்டார் நம் நாட்டில் வந்திருக்கும்பொழுது ஒரு திருவிழாவில் பூட்சுடன் வந்தால், அது பாவமானால், அவர்களைப் பாதிக்க வேண்டாமா? அது பாதிப்பதில்லை. பாவம் நமக்கு. நாம் நம்புவதால் பாவம். நம்பாததால் அவர்கட்குப் பாவமில்லை. பாவமும், புண்ணியமும் நம்பிக்கையைப் பொருத்தது.

பெண் : வேறு உதாரணங்கள்.

தாயார் : முதல் மந்திரிக்கு one way traffic உண்டா? அவர்கள் எதிராகப் போனால் அவரை சார்ஜ் செய்வார்களா?

வக்கீல் : முதல்வர் அவ்வழி போவதால் அந்த வழி முக்கியமாகும்.

தாயார் : யார் செய்வது என்பது கேள்வி. என்ன செய்கிறார் என்பது கேள்வியில்லை. பாவம், புண்ணியம் கர்மத்தைவிடச் சிறிய கருத்துகள். கர்மம் (force) சக்திக்குரியது. சக்தியைக் கடந்து ஜீவனில் உள்ளவர்க்குக் கர்மமில்லை.

வக்கீல் : அன்னை அப்படிக் கூறுகிறார்.

ஏஜெண்ட் : அப்போ பாவம் என்பது national culture சமூகப் பண்பிற்குரியதா?

தாயார் : சமூகத்திற்குரியது பாவம். சமூகம் மாறினால் பாவ, புண்ணியச் சட்டங்கள் மாறும். அன்னை பக்தர் forceஐ விட்டகன்று ஜீவனிலிருந்தால், அல்லது ஒருவர் அப்படியிருந்தால், அவர் செய்யும் காரியங்கள் புண்ணியமானவை. அவர் கையால் செய்வதாலேயே அவை புண்ணியமாக மாறிவிடும். நம் நிலை உயர்ந்தால், அக்காரியங்களைச் செய்யும் சந்தர்ப்பம் நமக்கு வாராது. வந்து அவற்றைச் செய்தால் தவறாகாது.

வக்கீல் : இதற்கு மேல் விவரங்கள் உள்ளனவா?

தாயார் : உலகம் பாவம் என்றுணரும் காரியத்தை ஜீவனில் வாழ்பவர் செய்ய நேர்ந்து செய்தால், அன்றுமுதல் அச்செயல் கொஞ்சம் கொஞ்சமாக உலகுக்குப் பாவமில்லை என மாறும்.

ஏஜெண்ட் : கேட்கவே நன்றாக இருக்கிறது.

அவர்களிருவரும் போனபின், தாயார், பெண்ணிடம் முடிவான கருத்தைச் சொல்லுகிறார்.

தாயார் : சிறு பெண் என்பதால் நான் சொல்லப் பிரியப்படவில்லை. நீ கேட்டுக்கொண்ட வகை நன்றாக இருந்தது. அன்பர் வாழ்விலிருந்து அன்னைக்கு மாறும்பொழுது - சக்தியினின்று ஜீவனுக்கு வரும்பொழுது - பாவம், புண்ணியமாவதைக் காணலாம். மாறும் தருணம் மனநிலையை அறிந்தால் அதுவே பாவத்தைப் புண்ணியமாக்கும் எல்லை.

பெண் : எனக்குக் காட்டமுடியுமா?



தாயார் : பாசம், பிரியம், நல்லது, கெட்டது, மனச்சாட்சி ஆகியவற்றைக் கடந்தபின் தெரியும் எல்லை அது. பாசம் தவற்றை ‘சரி’ எனப் பேசச் சொல்லும். வேண்டியவர் செய்யும் கெட்டது நல்லதாகும். அங்கெல்லாம் மனுநீதிச் சோழன்போல இருந்தால் எல்லைக்கோடு தெரியும்.

பிரின்சிபால் மகன் வந்து தாயாரைப் பார்த்து புத்தகச் சேவையைப் பற்றிய விவரங்கள், எந்தப் புத்தகத்தில் என்ன இருக்கிறது என்பனவற்றை அறிந்துகொண்டு போனான். ஓராண்டில் 1000 புத்தகங்கள் விற்க முடியுமா என நினைத்தான். 49ஆம் நாள் அவனும், அவன் நண்பர்களும் 1000 பிரதிகள் விற்றுமுடித்தனர். அதே காலத்தில் 28 இலட்சமிருந்த அவன் தொழில் 8 கோடியாயிற்று. அவனால் நம்பமுடியவில்லை என்பதுடன், சமாளிக்கவும் முடியவில்லை. அத்துடன் அவன் அன்னையை அடியோடு மறந்துவிட்டான். தாயாருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை வந்தது. “நீங்களே எனக்காகப் பிரார்த்தனை செய்தால் போதும்” என்று தாயாரிடம் கூறிவிட்டான். மகன் அன்னையை மறந்தாலும், தொழில் அபரிமிதமாகப் பெருகியதால் பிரின்சிபால் அன்னையை மனதால் இறுகப் பிடித்துக்கொண்டார். பெண் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தானும் தன் படிப்பில் அக்கறை செலுத்தவேண்டும் என்பது நடைமுறைக்கு வரவில்லை. இருப்பினும் பொதுவாக அவளுக்கு மார்க் சற்று அதிகமாக வருகிறது. ஒரு பாடத்தில் வகுப்புப் பரீட்சையில் முதலாவதாக நின்றாள். ஒரு நாள் பெண்ணும் தாயாரும் பேசுகிறார்கள்.

பெண் : அம்மா, பாக்டரி எப்படியிருக்கிறது?

தாயார் : அப்பாவோ, பையனோ, என்னிடம் எதுவும் சொல்வதில்லை.

பெண் : எதுவும் சொல்லவில்லை என்றால் எல்லாம் நன்றாக நடப்பதாக அர்த்தமா?

தாயார் : அப்படியும் எடுத்துக்கொள்ளலாம். சரியாக இருந்தால் இருவரும் ஆடுவார்கள்.

பெண் : சரியில்லை என நினைக்கிறீர்களா?

தாயார் : ஆம்.

பெண் : ஏன்?

தாயார் : இருவர் முகமும் வாடியிருக்கிறது.

பெண் : பார்ட்னர் வந்து நாளாகிறது.

தாயார் : அவராவது அன்னையை ஏற்பார். இவர்கள் ஏற்கமாட்டார்கள். அவருடைய மைத்துனர் தம் ஊருக்குப் போய் தியான மையத்தில் தீவிரமாக இருப்பதாகவும், அவர் குடும்பம் துரிதமாக முன்னேறுவதாகவும் அவர்கள் உறவினர்மூலம் செய்தி.

பெண் : நான் எவ்வளவு முயன்றாலும் இரண்டொரு நாளில் முயற்சி முடிகிறது.

தாயார் : உனக்குப் படிப்பில் ஆர்வமில்லை. பட்டம் எடுப்பதிலும், காலேஜ் போவதிலும் ஆர்வமுண்டு. உண்மையான ஆர்வம் பலிக்கும்.

பெண் : நாங்கள் மூவரும் ஏன் இப்படியிருக்கிறோம்?

தாயார் : முன்னோர்போல் நீங்கள் இருக்கிறீர்கள்.

பெண் : தாத்தா, மாமா, எவரும் எதையும் சாதித்ததில்லை. எந்த இலட்சியத்திற்காகவும் எவரும் முயன்றதில்லை. ஆனால் எல்லோரும் அப்படித்தானிருக்கிறார்கள்.

தாயார் : சாதிப்பது வேறு, மனம் நம்புவது வேறு. சுயநலம், பரநலம், பாசம், கடமை, திறமை, உழைப்பு, நேர்மை,



எனப் பல இலட்சியங்கள் உண்டு. நம் முன்னோர் எவரும் எதையும் பாராட்டியதில்லை. எப்படிச் சாதிக்க முடியும்?

பெண் : பரம்பரையாகச் சாதித்தவருக்குப் பலன் உண்டா?

தாயார் : பண்பு values என்பதற்கு அர்த்தம் உண்டு. நம் குடும்பத்தில் எது values?

பெண் : எப்பொழுதும் பிறரை மட்டம் தட்டிப் பேசுவது எல்லோரும் செய்வது?

தாயார் : ஏன்?

பெண் : சுபாவம்.

தாயார் : சுபாவம் எப்படி வந்தது?

பெண் : அண்ணனுக்கு யாராவது, ஏதாவது சொல்லிவிடப் போகிறார்கள் என முந்திக்கொண்டு அவர்களை மட்டமாகப் பேசும் மனம் உண்டு.

தாயார் : நம் குறையைப் பிறர் மேல் ஏற்றிப் பேசுவான் பெரியவன்.

பெண் : ஏன் நம் குடும்பம் குறையுடையதாக இருக்கிறது?

தாயார் : வறுமை.

பெண் : வறுமையிருந்தால் குறையிருப்பது அவசியமா?

தாயார் : வறுமையைவிட்டு வெளிவர முயலாவிட்டால் குறை எழும்.

பெண் : எந்த நேரமும் எப்படியாவது காசு சேர்க்க முனைகிறார்களே.

தாயார் : எந்த முறையில்?

பெண் : எல்லாம் தவறான முறையே தோன்றும்.

தாயார் : குறையிருக்கலாம். குறையை வலியுறுத்துபவனுக்கு வழியில்லை.

பெண் : நமக்குப் பாக்டரி எப்படி வந்தது?

தாயார் : அருள், குறையை மீறிச் செயல்படும். நாம் அருளை மீறிக் குறையை வலியுறுத்தினால் குறை வெல்லும், அருள் தோற்கும்.

பெண் : அண்ணாவால் எவரும் சந்தோஷப்படுவதைப் பார்க்க முடியாது.

தாயார் : சந்தோஷம் அதிர்ஷ்டம்.

பெண் : நீங்கள் வெளியே போயிருந்தபொழுது பிரின்சிபாலும், மற்றொருவரும் வந்தனர். உடன் வந்தவர் சர்க்கார் ஆபீசராம். 10 இலட்சத்திற்கு மேல் கடனாகிவிட்டதாம். உங்களைச் சந்திக்க வந்தனர். நான் 'கடன்' என்ற கட்டுரையைப் படிக்கச் சொன்னேன். தாம் படித்துவிட்டதாகவும், கடன் குறையவில்லை எனவும் கூறினார். மீண்டும் வருவதாகக் கூறினார்.

மாலையில் அவர்களிருவரும் மீண்டும் வந்தனர். தாயார் பிரின்சிபாலுடன் முதலில் தனித்துப் பேசினார்.

பிரின்சிபால் : இந்த ஆபீசருக்கு அன்னையைப் பற்றிச் சொன்னேன். உடனே ஆர்வமாக ஏற்றுக்கொண்டார். 10,000 ரூபாய் சம்பளம். சுத்தமானவர். இலஞ்சம் வாங்கமாட்டார். ஏராளமான கடன் தொல்லையால் அவதிப்படுகிறார்.



தாயார் : அன்னை ஆயிரம் வகையாகச் செயல்படுவார். இவர் சுத்தமானவர் என்பதால் உடனே பலிக்கும். தொல்லைகள் அற்றுப்போகும். கடன் இரு மடங்காக வளரும்.

பிரின்சிபால் : அப்படியொரு விஷயமிருப்பதாக நான் நினைக்கவில்லையே.

தாயார் : இவரே இலஞ்சம் வாங்குபவராக இருந்தால், அதிக இலஞ்சம் பெற்றுக் கடன் உடனே தீரும்.

பிரின்சிபால் : பயமாக இருக்கிறதே.

தாயார் : நான் அவருக்குப் புரியும் வகையில் சொல்கிறேன்.

பிரின்சிபால் : அதற்குமுன் எனக்குப் புரியும்படிச் சொன்னால் தேவலை. என் மகன் விஷயத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

தாயார் : உங்கள் மகன் உழைப்பாளி. இவர் ஊதாரி. அன்னை செயல்படும் வகைகள் அநேகம். இரண்டைச் சொல்கிறேன்.

1) **அன்னையை அறிந்து, போற்றிப் பாராட்டி, மனத்தில் அவரை ஏற்றுக்கொண்டு 'எனக்கு அன்னை வேண்டும். அவர் தருவது போதும்' என்றால், நாம் அவரை ஏற்பதால், நம்மைத் தவறு செய்ய விடமாட்டார். தவறு நம்மை அண்ட அனுமதிக்கமாட்டார். பக்தியை நம்பிக்கையாக்குவதால், அவர் நமக்குரியவற்றைப் பொறுக்கி, தேர்ந்தெடுத்துத் தருவார். பயமில்லை, பூரணப் பாதுகாப்பாயிருக்கும்.**

**2) அன்னை கொடுத்தால் போதும், எனக்கு என் வாழ்வை நடத்தத் தெரியும் என்பவர்க்கு, அன்னை பொருளையும், அதிர்ஷ்டத்தையும் அவரவர் பெறும் அளவுக்குக் கொடுக்கிறார். பெற்றவர் தம் இஷ்டப்படி, தாம் பெற்றதை அனுபவிக்கிறார்.**

பிரின்சிபால் : இவரை விடுங்கள். எனக்கு அன்னை செயல்படும் அத்தனை வகைகளும் தெரியவேண்டும். அது முக்கியம். நீங்கள் இவருக்குரிய பதிலைச் சொல்லியனுப்புங்கள். அவர் பெரிய எதிர்பார்ப்புடன் வந்திருக்கிறார்.

தாயார் : நாம் உள்ளதைச் சொல்லலாம். எவரையும் திருப்திசெய்ய முடியாது, கூடாது.

இருவரும் வந்து ஆபீசரைச் சந்தித்தனர்.

ஆபீசர் : என் கடன் தீருமா?

தாயார் : தீருமா என்பது பிரச்சினையில்லை, நிச்சயம் தீரும். தீரும் வகைகள் பல,

**1) கடன் நியாயமாகச் செலவழிக்கப்பட்டிருந்தால், நியாயமான வழியில் பணம் வந்து தீரும்.**

**2) இலஞ்சம் வாங்குபவருக்கு அதிக இலஞ்சம் வந்து தீரும்.**

**3) கடனைப் பற்றிக் கவலைப்படாதவர்க்கு, மேலும் கடன் பெற்றுத் தீரும்.**

ஆபீசர் : எப்படித் தீர்ந்தாலும் பரவாயில்லை, தீர்ந்தால் போதும்.

பிரின்சிபால் : அம்மா சொல்வதைச் சற்று நிதானமாகக் கேளுங்கள்.



தாயார் : கடன் ஏற்பட்ட மனப்பான்மை கடமை மனப்பான்மையானால், அல்லது இன்று கடமை மனப்பான்மையை வளர்த்துக்கொண்டால், பின்விளைவுகளிருக்கா. தற்சமயம் சிரமம் போக வேண்டுமானால், அது போய்விடும், பிறகு அதிகபட்சம் சிரமம் வரும்.

பிரின்சிபால் : அன்னையை நாம் தாயாகவோ, தெய்வமாகவோ, குருவாகவோ, மனச்சாட்சியாகவோ, கருவியாகவோ, சக்தியாகவோ, ஏற்கலாம். முதல் 4 வகைகளிலும் பின்விளைவுகளிருக்கா. ஏனெனில் பொறுப்பு அன்னையுடையது. கடைசி இரு முறைகளில் நாம் பொறுப்பை ஏற்கிறோம். அன்னை தருவது பொருள், செலவழிக்கும் பொறுப்பு நம்முடையது. இவருக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ஆபீசர் : 'கடன்' கட்டுரையைப் படிக்கச் சொன்னார்கள். நன்றாக விளங்குகிறது. படித்தேன், பலனில்லை.

தாயார் : படித்தால் பலனிருக்கும் என்று எப்படிப் புரிந்துகொண்டீர்கள்?

ஆபீசர் : நானே வைத்துக்கொண்டேன்.

தாயார் : படித்தால் பிரச்சினையின் அம்சங்கள் விளங்கும். உங்களுக்கு என்ன விளங்கிற்று?

ஆபீசர் : பழைய கடன் அனுபவங்களை அன்னையிடம் கூறினால், அவை தீரும் என்று விளங்கியது.

பிரின்சிபால் : 'பழைய கடன் மனப்பான்மைகளை மாற்றினால் கடன் தீரும்' என்று கட்டுரை கூறுகிறது.

ஆபீசர் : மனப்பான்மை என்று என்ன இருக்கிறது? கடன் வாங்கினேன், தரமுடியவில்லை.

தாயார் : 10,000 சம்பளம் என்றால், 10 இலட்சம், 8 வருஷ வருமானம். சம்பளம் வட்டிக்கே பற்றாது.

ஆபீசர் : வட்டி 50,000 ரூபாய் மாதத்திற்கு. கடன் 7 இலட்சம், வட்டி 3 இலட்சம், சேர்ந்து 10 இலட்சம்.

பிரின்சிபால் : அப்பணத்தை என்ன செய்தீர்கள் என்று கூறவில்லையே. கல்யாணம் செய்தீர்களா, சொத்து வாங்கினீர்களா? எப்படித் திருப்பித் தருவது என்று வாங்கினீர்கள் எனக் கூறவில்லையே?

தாயார் : கொஞ்ச நாள் பொறுத்துப் பார்ப்போம்.

ஆபீசர் : நான் இங்கு வரும் வழியில் ஒரு நண்பர் வட்டியைச் சற்று உயர்த்தி முதலைக் கடனாகக் கொடுக்கிறேன் என்றார்.

தாயார் : நீங்களாக வாங்கினீர்களா? வேறு யாராவது தூண்டுதலால் வாங்கினீர்களா?

ஆபீசர் : மனைவிதான் பணம், பணம் என அரிப்பாள்.

தாயார் : நாம் பிறகு சந்திப்போம்.

ஆபீசர் போய்விட்டார். பிரின்சிபால் மேலும் அன்னையைப் பற்றி அறிய ஆசைப்பட்டார்.

தாயார் : நாங்கள் அடிமட்டத்திலிருந்தோம். எங்களுக்கு அதிர்ஷ்டம் வந்து உச்சாணிக்கொம்புக்குப் போக வாய்ப்பு வந்துள்ளது. எங்கள் குடும்பம் இந்த வாய்ப்பை எப்படி அனுபவிக்கப்போகிறது என்று நான் கவலைப்படுகிறேன்.

*தொடரும்....*

❀❀❀



**"Agenda"**

## Sri Aurobindo left without revealing the secret.

### ஸ்ரீ அரவிந்தர் இரகஸ்யத்தைக் கூறாமல் போய்விட்டார்.

இரகஸ்யம் என்று அன்னை கூறுவது பெரியது. ஒஸாமாவை அமெரிக்கர்கள் வருஷத்திற்குமேல் தேடுகிறார்கள். கிடைக்கவில்லை. அவனிருக்குமிடம் தெரிந்தவனுக்கு ஒஸாமாவைப் பிடிப்பது எளிது. ஒரு காட்டில் புதையலைத் தேடுவது எப்படி? எத்தனையிடங்களைத் தோண்டிப் பார்க்க முடியும்? தெரிந்தவன் நேரே போய் கண்டுபிடிப்பான்.

பிரம்மாண்டமான மாற்றத்தை நாம் இப்பக்கத்திலிருந்து தேடுகிறோம். அடுத்த பக்கத்திலுள்ளவர்க்கு அதன் இரகஸ்யம் கண்ணுக்குத் தெரியும். நாம் தேடுவது 100 ஆண்டுகள், 1000 ஆண்டுகள் என ஆகலாம். இரகஸ்யத்தைக் கூறினால் உடனே கண்டுபிடிக்கலாம். அப்படிக் காணவேண்டிய இரகஸ்யங்கள் 3:

1) **மனத்திற்குரிய இரகஸ்யம்**
2) **வாழ்வுக்குரிய இரகஸ்யம்.**
3) **உடலுக்குரிய இரகஸ்யம்.**

The Life Divine மனத்திற்குரிய இரகஸ்யத்தை வெளிப்படையாகக் கூறுகிறது. இந்நூல் புரிந்தால் நாம் ஜட உலகினின்று சூட்சும உலகுக்குப் போகலாம். உலகில் விளங்காதது எதுவுமிருக்காது. எப்படி வறுமையை ஒழிப்பது, துன்பத்தைத் துடைப்பது, ஆதியின் இரகஸ்யமான பிரம்மத்தைக் காண்பது ஆகியவை இதனுள் அடக்கம்.

இரண்டாம் இரகஸ்யம் வாழ்வுக்குரியது. அன்னையின் கோட்பாடுகள் (10) அவற்றைக் கூறுகின்றன. ஆன்மாவை நம்பி, வசதி தேடாமல், குறை கூறாமல், வேலையைப் பிரியமாக ஏற்று, புறத்தை அகமாகக்கொண்டு, எந்த நேரமும் முன்னேறப் பிரியப்பட்டுச் சமர்ப்பணத்தை ஏற்றால் வாழ்வு அதிர்ஷ்டமாகவும், அருளாகவும் மாறும்.

மூன்றாம் இரகஸ்யம் உடல் திருவுருமாறுவது. அன்னைக்குக் கிடைக்கவில்லை. இந்த இரகஸ்யம் கிடைத்தால் மரணம் அழியும், சத்தியஜீவன் பிறப்பான். 100 ஆண்டுகள் வாழ்ந்தால் தமக்கு அது கிடைக்கும் என்றார் அன்னை. இதனுள் உள்ள கருத்துகள்,

- சாதாரண பொருள்களைக் கொடுப்பதுபோல் பெரியவற்றைத் தரமுடியாது.
- அப்படிக் கொடுத்தால் அடுத்தவர் பெற்றுப் பயனடைய முடியாது.
- ***நாம் கொடுத்து அவர் பயனடையாவிட்டால், மீண்டும் எவருக்கும் அதைக் கொடுக்கும் திறனை நாம் இழப்போம்.***
- என் ஞானத்தை நான் எவர்க்கும் தரமாட்டேன் என்பதும், தகுதியற்றவர்க்கு நான் வலிந்து தருவேன் என்பதும் ஒரே மனப்பான்மை.
- ஐரோப்பிய நாடுகளைக் கண்டு ஆசிய நாடுகள் வளம் பெறவில்லை.
- முஸ்லீமல்லாதாரை அழிக்கவேண்டும் என்று பேசும் முஸ்லீம்கள் தாங்கள் முன்னுக்கு வர முயலவில்லை.
- ***தேவைப்பட்டவர் வேண்டும் எனக் கேட்காமல் கொடுக்கக் கூடாது, கொடுக்க முடியாது, கொடுத்தால் பெறுபவர் கொடுப்பவருக்குக் கொடுமை செய்வார்.***
- தயாரில்லாதவரைப் பெறும்படி வற்புறுத்துவது அவருக்குக் கொடுமை.
- Taste of Ignorance, அஞ்ஞானம் ருசிக்கிறது என்பதே அது.

❀❀❀



**"அன்பர் உரை"**

## பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(இராணிப்பேட்டை தியான மையத்தில் 15.8.2003 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மி நாராயணன் நிகழ்த்திய உரை)*

நாம் சமூகத்தை பிரம்மத்திற்கு ஒப்பிடுவோம். நாம் சமூகத்தைப் பார்ப்பது இல்லை. மனிதனைப் பார்க்கிறோம். உண்மை என்னவென்றால் மனிதன் சமூகத்தின் பகுதி. மனிதனே சமூகம். நாம் சமூகத்தைப் பார்க்கமுடிவது இல்லை. ஆனால் சர்க்காரை அறிவோம். நம் அனுபவத்திற்கு சர்க்கார் உண்மை. வெள்ளிடை மலை. சமூகம் உண்மை இல்லை. நாட்டில் பெரிய ஸ்தாபனங்களான ரயில்வே, நெய்வேலி, கல்லூரி போன்றவற்றை காண்கிறோம். அவை சக்தி வாய்ந்தவை. நாடெங்கும் பரவி உள்ளன. நாம் நெய்வேலியை நெய்வேலியாகக் காண்கிறோமே தவிர சமூகத்தின் வெளிப்பாடாகக் காண்பது இல்லை. ஒரு பெரிய பாக்டரிக்குப் போனால் முதல் கேள்வியாக இதற்கு யார் முதலாளி என்று கேட்கிறோம். நாம் காணும் ஸ்தாபனங்களுக்கு எல்லாம் யார் முதலாளி என்று நமக்குக் கேட்கத் தோன்றுவது இல்லை. அந்த முதலாளி சமூகம். **சமூகத்தினுடைய முதலாளி பிரம்மம்**. எல்லையில் ராணுவம் நாட்டைப் பாதுகாக்கிறது. உள்நாட்டுக் கலவரங்களை போலீஸ் அடக்குகிறது. ஏர்போர்ட், துறைமுகம், ரயில்வே, பஸ், லாரி, மக்களையும் பொருட்களையும் ஏற்றிச் செல்வது நமக்கு நிதர்சனம். நூற்றுக்கணக்கான பல்கலைக்கழகங்களும், ஆயிரக்கணக்கான கல்லூரிகளும், இலட்சக்கணக்கான பட்டதாரிகளை உற்பத்தி செய்கின்றன. படிப்பு நாட்டில் பரவுவது தெரிகிறது. **சமூகம் கண்ணில்படுவது இல்லை**. அறிஞர்கள் சர்க்காரைச் சமூகம்

என்கிறார்கள். ராணுவம், கப்பற்படை, விமானப்படை, சர்க்காரால் அமைக்கப்பட்டன என்பதால், சர்க்காரை உற்பத்தி செய்த சமூகத்தால் அவை மறைமுகமாக ஏற்படுத்தப்பட்டன. **அவை சமூகமாகும்**. பெரிய ஸ்தாபனங்கள் ராட்சசனாக வீற்று இருக்கின்றன, அவையும் சமூகம். அவை அதன் அங்கங்கள். மனிதன், குழந்தை, குடிமகன், கிழவன், மேதை, எளியவன் ஆகிய அனைவரும் சமூகம். இவை சமூகம் எனில் என் குடும்பம் சமூகம், நானே சமூகம். இருப்பினும் இந்த வினோதமான சமூகம் தெரியவில்லை. **அறிவிற்குப் புலப்படுவது கண்ணிற்குப் புலப்படுவது இல்லை**. என் கண்ணுக்குத் தெரியாத பிரம்மம், என் அறிவிற்குப் புலப்படாத பிரம்மம் ஆத்மாவிற்குத் தெரிகிறது. எனக்கும் அது தட்டுப்படுகிறது. இவற்றையெல்லாம் சேர்த்தால் மறைந்த ஆத்மா விழித்து பிரம்மத்தை அறியும்.

## பிரம்மம் என்னும் சத்தியம் என்ன?

நமக்குப் பல அம்சங்கள் உள்ளன. பிரம்மத்திற்கும் அது உண்டு. நாம் சமூகத்தை, கடை, ரோடு, போஸ்ட் ஆபீஸ், துறைமுகம் என்று காண்பதுபோல் பிரம்மத்தையும் பல ரூபங்களில் காண்கிறோம். மரபில் கூறும் மூன்று அம்சங்களை ஸ்ரீ அரவிந்தரும் கூறுகிறார். **அவற்றை ஆத்மா, புருஷா, ஈஸ்வரா என்று கூறுவோம். ஆத்மாவை பிரம்மம் எனவும் கூறுவதுண்டு**. ஆத்மாவை ஆங்கிலத்தில் Self என்கின்றனர். பிரம்மம் எனவும் கூறுகிறோம். புருஷன் என்பது ஜீவன், ஈஸ்வரன் என்பவன் படைப்பவன். சமூகத்தில் இவற்றை பார்லிமெண்ட், மந்திரி சபை, நிர்வாகம் என்பவற்றிற்கு ஒப்பிடலாம். ஆத்மா சிந்தனையால் படைக்கிறது, புருஷன் தீவிரமாகச் செயல்படுகிறது. **ஈஸ்வரன் சிந்தனையால் படைத்து தீவிரமாகச் செயல்படுத்துகிறான்**. பார்லிமெண்ட் சட்டம் இயற்றுகிறது. அவை நாட்டை முன்னேற்றும் சட்டங்கள். மந்திரிசபை தீவிரமான திட்டங்களை உருவாக்குகிறது. நிர்வாகம் திட்டங்களை



அமல்படுத்துகிறது. மனிதனிடம் ஒப்பிட்டுப் பார்ப்போம். அவன் மனம் சிந்தனையால் படைக்கிறது எனில் எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுகிறோம். அவன் உணர்ச்சி வேலை செய்கிறது. தீவிரமான திட்டங்களைச் செயல்படுத்துகிறது. பெரிய வாய்ப்போ, ஆபத்தோ வரும்போது க்ஷணத்தில் அவன் செயல்படுகிறான். அது ஆழ்மனச் செயல், திட்டமிட்டு நிதானமாகச் செயல்படுவது மனம். **ஆழ்மனம், மேல் மனமானால் எந்நேரமும் நாம் அப்படிச் செயல்பட்டால் யோகம் நிறைவேறும்**. ஆத்மா கடந்தது. புருஷன் பிரபஞ்சத்திற்கு உரியவன். தனி மனிதன், ஈஸ்வரன். **இம்மூன்றையும் சேர்த்து ஒரே சமயத்தில் வெளியிடுவது பிரம்மம்**. ஒருவன் தன்னை உலகத்துக் குடிமகனாகக் கருதி நாட்டிற்குத் தலைமைதாங்க முன்வருவது அதுபோன்றது. இம்மூன்றும் மனிதனில் சேர்ந்து ஒரே சமயத்தில் செயல்படுவது பிரம்மம் செயல்படுவது ஆகும்.

## சத்-புருஷன்; சத்-பிரம்மம் :

கடந்த நிலையையும் பிரபஞ்சத்தையும் ஒன்றாகக் காணும்போது சத் பிரம்மம் என்ற சத் புருஷன் முழுமையாக வெளிப்படுகிறது. மறுபுறம் நாம் பிரபஞ்சத்தைக் காண்கிறோம். அது அறிவிற்குப் புலப்படுவது இல்லை. புருஷன் பிரகிருதியாகிறது. பிரம்மம் சிருஷ்டிக்கின்றது. அனந்த குணமானவன், குணமாகிறான் என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். **நமது ஆராய்ச்சிக்கும், அறிவிற்கும் இது பொருத்தமாக இல்லை**. வாழ்வில் உதாரணங்கள் இல்லாமல் இல்லை. கிரியாஊக்கி, தான் கலந்துகொள்ளாமல் இரசாயன மாறுதலை உண்டுபண்ணுகிறது. ஒரு பந்தை மேலே வீசினால் அது மீண்டும் கீழே வருகிறது. அது எப்படிக் கீழே வருகிறது என்று தெரியவில்லை. சைபீரியாவிலிருந்து வேடன்தாங்கலுக்கு வரும் பறவைகளுக்கு யார் வழி சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. நாடு என நாம் கூறுவது என்ன என்று அறியாதபோது ஒரு தலைவனை அது தேர்ந்தெடுக்கும் வழி என்ன? என்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

நீர் $0^{\circ}C$ வரும்போது ஐஸ்கட்டிகள் உற்பத்தியாகின்றன. எப்படி? பொட்டல்காடு, பேக்டரி, கம்பெனி ஆகிறது. ஒருவர் உற்பத்தி செய்கிறார் எனில் எப்படி? கம்ப்யூட்டரைப் பார்த்தால் திடீரெனப் படங்களும், எழுத்துகளும் வருகின்றன. **சட்டம் தெரியாதவரை நடப்பது ஆச்சரியமாக இருக்கிறது. எப்படி என்று தெரிந்தால் ஆச்சரியம் இருக்காது**. நமக்குத் தெரிந்ததைச் சம்பந்தமில்லாத இடங்களில் பொருத்திப் பார்ப்பது நம் வழக்கம். எலக்டிரிக் பல்பில் எண்ணை எங்கு விடுகிறார்கள் என்று கேட்பது உண்டு. பால் பாயிண்ட் பென்னில் இங்க் போட முயலலாமா? கால்பந்து விளையாடும்போது வாலிபால் என நினைத்து பந்தைக் கையால் தொடலாமா? வீட்டில் மேடைப் பிரசங்கம்போல் முழங்கலாமா? காப்பி, டீயில் உப்பு போடவேண்டும் என்று வற்புறுத்தலாமா? புருஷன் புரிகிறது, பிரகிருதி புரிகிறது எனில் இரண்டும் சேர்ந்த முழுமை இந்தச் சட்டப்படிப் புரியாது. காரணம் காரியத்தில் முடிவதைக் காண்கிறோம். சாப்பிடாவிட்டால் உடல் இளைப்பதைப் பார்க்கிறோம். அசுத்தத்தில் வியாதி உற்பத்தியாகிறது, தெரிகிறது. கல்லைக் கண்ணாடியில் வீசினால் கண்ணாடி உடைகிறது. என்ன நடக்கிறது என்பது தெளிவு; எப்படி எனத் தெரிவது இல்லை. கண்ணாடி ஏன் உடையவேண்டும் என்று நாம் நினைப்பது இல்லை. **எப்படி இந்தக் காரணம் அந்தக் காரியத்தில் முடிகிறது என்ற கேள்வியை எழுப்பத் தோன்றவில்லை**. உயர்ந்த காரியங்களில் இது புரிவது குறைவு. காரியம் சிறியது ஆனால் கண்ணுக்குப் புலப்படுவது இல்லை. காரியம் பெரியது, ஆனால் மனத்திற்குப் பிடிபடுவது இல்லை. துளி உப்பு அத்தனைச் சாப்பாட்டிற்கும் ருசி தருகிறது. இவ்வளவு பெரிய உடலில் கண்ணுக்குத் தெரியாத முள் தாங்கமுடியாத வலியைத் தருகிறது. புரட்டாசியில் மழை பெய்கிறது. சூரியனும், சந்திரனும் தவறாமல் உதயம் ஆகிறார்கள். நாம் அதை அறிவது இல்லை. எலக்ஷன் எப்படிப் போகும், விலைவாசி எப்படி மாறும் என்று தெரியாது. நாம் ஆத்மாவையும், கடவுளையும் கண்டபின்னும் உலகில் அவை



செயல்படுவது விளங்குவது இல்லை. ஆன்மா பொருட்களில் வெளிப்படுகின்றது என்றாலும், ஆன்மாவே பொருள் என்றாலும் அவை நமக்கு மந்திரம்போல் இருக்கின்றன. **நமக்கு இன்று தெரியவில்லை என்பதால் தெரியமுடியாது என்பது இல்லை, கண்டுகொள்ள முடியாது என்பது இல்லை**. Phoneஇல் பேசுபவருக்கு phone எப்படி வேலை செய்கிறது என்று தெரியாமல் இருக்கலாம், ஆனால் இன்ஜினியருக்குத் தெரியும். நாம் சாப்பிட்டது ஜீரணம் ஆவது எப்படி என விஞ்ஞானம் அறியும், டாக்டருக்குத் தெரியும். நமக்குத் தெரியாது, நாம் தெரிந்துகொள்ள முயலவில்லை என்பதால் தெரியவில்லை. முடிவை ஏற்கிறோம், முடிவு எப்படி வந்தது என்ற கேள்வியை எழுப்புவதில்லை. வாழ்வில் தெரியும் சுவடுகளை நாம் அலட்சியம் செய்கிறோம். **சத்தியஜீவியத்திற்குப் புரிவதை மனத்தால் புரிய முயல்வதால் நமக்குப் புரிவது இல்லை**. ஓரிடத்திலுள்ள சட்டத்தை அடுத்த இடத்தில் பின்பற்ற நாம் பிடிவாதம் செய்வதால் நமக்குப் பல விஷயங்கள் புரிவது இல்லை. வீட்டில் இருப்பதைப்போல் ஆபீசில் இருப்பது இல்லை. கல்லூரியிலிருந்து ஆபீசிற்கு வந்தவுடன் கல்லூரியில் இருப்பதுபோல் officeஇல் இருக்கப் பிடிவாதம் செய்பவர்கள் உண்டு. அது பிரச்சினையை உற்பத்தி செய்யும். படிப்பு என்றால் என்ன சம்பளம் வரும் என்று கேட்கிறோம். தன்னை அலங்காரம் செய்யும் பெண் செலவை நினைக்கமாட்டாள். பெண் என்றால் முதல் கேள்வி சீதனம், அழகு. குழந்தை சந்தோஷமாக விளையாடினால் இதனால் என்ன வரும் என்று கேள்வி கேட்பது இல்லை. நம் குழந்தை நமக்கு முக்கியம், அழகு இல்லை. **நாம் ஏற்றுக்கொண்டவற்றுள் நியாயமாகப் பேசுவோம், ஏற்றுக் கொள்ளாதவற்றுள் நியாயமாகப் பேசுவது இல்லை. அறிவிற்குப் பொருத்தமான நியாயத்தை மனம் ஏற்றுக்கொண்டால் ஆண்டவன் புரியும்**. இந்த அத்தியாயத்தில் 15, 20 வகைகளில் கண்மூடியாக இருக்கும் கேள்விகளுக்கு பகவான் பதில் அளிக்கிறார்.

**ஆண்டவன் அறிவிற்குப் புலப்படாததில்லை :**

ஆண்டவன் அதற்குரிய முறைக்குப் புரியும். வேறு முறைகளுக்குப் புரியாது. முழம் போட்டு இமயமலையை அளக்கமுடியாது. சங்கிலி போட்டும் அளக்க முடியாது. T.V. எப்படி செய்கிறார்கள் என்று அறிய தினசரி பேப்பர் படித்தாலோ, பாட புத்தகங்களைப் படித்தாலோ புரியாது. 1800இல் மிஸ்டர் எவரெஸ்ட் என்றவர் கணித முறைப்படி இமாலயத்தின் உயரத்தைக் கணக்கிட்டார். விஞ்ஞானம் படித்தால் T.V. எப்படி வேலை செய்கிறது என்று தெரியும்.

சத் புருஷன் அனந்தமானது. அதன் வாழ்வும், செயலும் அனந்தமானவை. நம் மனம் சிறியது. அறிவின் அனுபவம் குறுகியது. சிறிய மனமும், குறுகிய அறிவும் அனந்தமான சத் புருஷனை அறிவது அறிவிற்குப் பொருத்தமாகாது. **இந்தக் கட்டெறும்பு அந்த மத யானையைக் கட்டுப்படுத்த முடியாது**. ஏழையால் வீடு கட்ட முடியாது என்பது இல்லை. சோம்பேறித்தனத்தை ரசிப்பவனால் நிச்சயமாக வீடு கட்டமுடியாது. உள்ளூரில் பெருந் தலைவன் ஆர்ப்பாட்டமாக இருப்பதால் நாட்டிற்குத் தலைவனாக முடியாது. நட்சத்திரங்களைக் கண்டு வியந்து கவி எழுதலாம், வான சாஸ்திரம் பயில டெலஸ்கோப் இல்லாமல் முடியாது. 300 ஆண்டுகளுக்குமுன் நாம் தாஜ்மஹாலைப் பற்றிக் கேள்விப்பட்டோம். அதன் அழகை நேரில் போய்ப் பார்க்கவேண்டும். Photo வந்தபின் தெரிந்தது. **பிரம்மத்தைப் பற்றி அறிய நம் முறைகள் பொருத்தம் இல்லை. பொருத்தமான முறைகள் உள்ளன**. நம் முறைகள் பொருத்தம் இல்லை என்று அறிவதே அறிவு. நமக்கு உலகம் புரியவில்லை என்றால் அதை மாயை எனக் கூறத் தோன்றுகிறது, கற்பனை என்கிறோம். குறுக்கே நிற்பது அறியாமை. உலகம் செழிப்பானது, செறிவானது, அதன் நிர்வாகம் அற்புதம். மனித அறிவு சிறியது, நம் முறைகள் குறுகியவை. அவை தடை. பருத்தி புடவையாவது அற்புதமான சிக்கலான முறை.



பட்டுப்புடவை நெய்வதும், அதன் ஜரிகைகளும் நூற்றுக்கணக்கான வருஷங்களாக எழுந்தவை. பட்டுப்பூச்சியிலிருந்து பட்டு வருகிறது என்று தெரிவதால் மட்டும் பட்டுப்புடவை நெய்வது புரியாது. நம் அறிவு அரைகுறையான அறியாமை. விஞ்ஞானம் பெரியது. அலைகடல் போன்றது. நம் சிற்றறிவிற்கு அவை எட்டா. பகுத்தறிவு அனுபவத்தால் வருவது. மரம், செடி, கொடி, ஜடம், ஆகியவற்றைப் பற்றிய அனுபவம் பகுத்தறிவு. குறுகிய வட்டத்திற்கு உரிய நிலை இல்லாத அனுபவம் தரும் அறிவு அது. தண்ணீர் பள்ளத்தை நோக்கி ஓடுகிறது, மரம் காய்க்கிறது, விலங்கு குட்டிப் போடுகிறது, இவற்றைக் கண்டு அறிவு சில முடிவுகளுக்கு வருகிறது. அதன்படி பிரபஞ்சத்தை மனம் அறிய முயலுகிறது. இந்த அனுபவத்தைக் கடந்து செல்ல மனத்தால் இயலாது. இதற்கு எதிரானதை மனம் தவறு என்று கூறும். கிராமத்து மனிதன் ரேடியோ கேட்கிறான், phoneஇல் பேசுகிறான், காரைப் பார்க்கிறான். ஒலி 1000 மைல்கள் போகும் என்றோ, வண்டி தானே நகரும் என்றோ, அவனால் நினைக்க முடியாது. அவனுடைய அனுபவம் வேறு, நவீன காரணங்கள் வேறு. பிரம்மம் 1000 நிலைகளுக்கு உரியது. அறிவு அதை மறுக்கும். படிக்காதவனுக்குப் பார்த்தது, கேட்டது புரியும்; நாள், தேதி, கிழமை, புரியாது. படித்தவன் மனம் படிக்காதவனுக்குப் புரியாது. **படித்தவன் மாதம், தேதி, வருஷத்தை அறிந்தவன்; அது படிக்காதவனுக்குப் புரியாது**. காயம் தானே குணம் அடையும், பிளாஸ்திரி போட்டால் காயும், தலைவலி மாத்திரையால் போகும். நாம் அறிந்தவற்றால், நாம் அறிந்தவற்றைக்கொண்டு இவ்வளவையும் புரிந்துகொள்ள முடியாது. நாம் இவற்றைப் பொருட்படுத்துவது இல்லை, அவை புதிர். மேலே போகப் போக புரிவது குறைவு. பாட்டையும், பேச்சையும் கேட்கிறோம். நாமும் பேசுகிறோம். பேச்சு, பாட்டு எழுவதை நாம் விளக்க முடியுமா? கல்லும், மண்ணும் அசைவது இல்லை; விலங்குகள் ஓடுகின்றன; பறவைகள் பறக்கின்றன. உயிரில்லாதவை அசைவது இல்லை. பறவை பறக்கின்றது எனப் புரிகிறது. கார் தானே

ஓடுகிறது; விமானம் பறக்கின்றது; அவற்றை நம்மால் விளக்க முடியுமா? நாயின் படத்தை ஒருவன் வரைகிறான்; நமக்கு வரைய முடியவில்லை; அவன் எப்படி வரைந்தான் என்று நமக்கு விளங்குவது இல்லை. மந்திரம் விஷத்தை முறிக்கிறது, அது புரியாது. மந்திரம் ஆத்மாவில் எழுகிறது, பேச்சு உயிரிலிருந்து வருகிறது, நமக்கு மந்திரம் புரியாது.

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பகவான் யோகம் சுதந்திரத்திலாரம்பித்து சுதந்திரத்தால் வளர்ந்து சுதந்திரத்தில் பூரணம் பெறுகிறது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு விஷயமாக அக்கறையும், நினைவுமிருக்கிறதா என அறிய ஒரு வழியுண்டு. வேறு காரியத்தில் ஈடுபட்டுள்ள பொழுது இக்காரியம் நினைவு வந்தால் அக்கறையிருப்பதாக அர்த்தம்.

மணிக்கொரு முறை சமர்ப்பணம் செய்ய ஏற்றுக் கொண்டவர்கள் அக்கறையில்லாதவர்களானால், இந்த முடிவை அரை மணி நேரத்தில் மறந்துவிடுவார்கள்.

***பெரிய காரியத்தைச் சிறிய முறையில் பூர்த்தி செய்ய முடியாது.***



## அன்பர் கடிதம்

**அன்னையே துணை!**

என் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அன்னை எனக்கு அளித்த அருளைப் பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

எனக்குத் திருமணம் ஆகி ஒன்றரை வருடம் ஆகிறது. நான் ஓர் இளங்கலைப் பட்டதாரி. எனக்குத் திருமணம் ஆவதற்குமுன்பே நான் ஓர் அன்னையின் பக்தை.

என் புகுந்த வீட்டில் நுழைவதற்குமுன் அன்னையை அழைத்து பிறகுதான் உள்ளேயே சென்றேன். அன்றிலிருந்து என் வாழ்வில் மிகவும் இன்பமயமான ஒரு சூழ்நிலையுடன்கூடியதொரு வாழ்க்கையில் வாழ்ந்துவருகிறேன்.

ஒரு வருடத்திற்குமுன், என் மனதில் ஒரு வலி ஏற்பட்டது. என்னவென்றால், "நமக்கு குழந்தை பிறக்கவில்லையே!" என்று. நான் தினமும் அன்னைக்கு மலர்கள் (எனக்குக் கிடைத்த மலர்களை) வைத்து பிரார்த்தனை செய்துவந்தும், இப்பொழுதும் செய்துவருகிறேன். மற்றவர்கள் என்னை சிவன் கோவிலுக்குச் சென்றுவரச் சொன்னார்கள். ஆனால், நான் அன்னையைமாத்திரம் வணங்கி பிரார்த்தனை செய்துவந்தேன். அதன் விளைவு, எனக்கு அன்னையின் அருள் செயல்பட ஆரம்பித்தது. திருமணம் ஆகி ஆறாவது மாதத்திலிருந்து என் வயிற்றில் ஒரு குழந்தை உருவாயிற்று.

அன்றிலிருந்து அன்னையிடம் என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு முழு ஆரோக்கியத்தை வழங்குமாறும், அவர்கள் கையில்

ஒப்படைத்துவிட்டதாகவும் சமர்ப்பணம் செய்துவிட்டு எந்தவிதக் கவலையும்கொள்ளாது இருந்தேன்.

நாட்கள் விரைந்து ஓடின. எனக்கு என் தந்தை வளைகாப்பு வைத்து, பிறந்த வீட்டிற்கு அழைத்துவந்தார். வளைகாப்பு மார்ச் 17ஆம் நாள் 2002 அன்று நடைபெற்றது. குழந்தை பிறப்பதற்கு due date கொடுத்தார்கள். அது சித்திரை மாதத்தில் வந்தது. சித்திரையில் குழந்தை பிறந்தால், குழந்தையின் தந்தைக்கு ஆபத்து என்று அனைவரும் என்னைத் திட்டினார்கள். குழந்தை உருவானது தெரிந்ததிலிருந்தே அன்னையிடம் வேண்டிக்கொண்டேன், “சித்திரையில் குழந்தை பிறக்கக் கூடாது” என்று.

என்ன அற்புதம்! எனக்கு பங்குனி மாதமே, அதாவது ஏப்ரல் 2ஆம் நாள் குழந்தை பிறந்தது. எனக்கு ஏப்ரல் 2ஆம் நாள் காலை 4.30 மணியளவில் வலி எடுத்தது. என்னை உடனே ஆட்டோவில் அழைத்துசென்றார்கள். நான் அன்னையின் திருவுருவப் படத்தை, அபிஷேகப்பாக்கம் அன்னையின் அன்பர் வீட்டில் பார்த்துவிட்டுச் சென்றேன்.

புதுச்சேரி மகப்பேறு மருத்துவமனையில் என்னை சேர்த்தார்கள். நான் வலியில் “**மதர், மதர்**” என்றே அழைத்து வேண்டிக்கொண்டு இருந்தேன்.

எனக்கு அன்னையின் அருள் வெகு விரைவாகவும், அபரிமிதமாகவும் செயல்பட்டது. நான் அழகான ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தேன்.

அப்பொழுது குழந்தை பிறந்தவுடன் அழவில்லை என்று கண்ணாடி அறையில் கொண்டுபோய் வைத்துள்ளதாகக் கூறி,



“உன்னை, பால் கொடுக்க அழைப்பார்கள், நீ சென்று பால் கொடுத்துவிட்டு வரவேண்டும்” என்று கூறினார்கள்.

எனக்குக் குழந்தை பிறந்த மறுநிமிடம் எனது நன்றியை அன்னைக்கு மனக்கண்ணில் “நன்றியறிதல்” மலரை நினைத்து நன்றி செலுத்தினேன். பிறகுதான் என் மனம் மிகவும் மகிழ்ந்தது.

குழந்தை காலை 11.15 மணிக்கு பிறந்தது. என்னை மறுநாள் காலை 10.00 மணிக்கு அழைத்து, குழந்தையை என் கையில் கொடுத்து, பால் கொடுக்கச் சொன்னார்கள். ஆனால், என் குழந்தை பால் குடிக்கவே இல்லை. நான் உடனே அன்னையை அழைத்து விவரத்தைச் சொன்னேன்.

சிறிது, சிறிதாக பால் குடித்தது குழந்தை. நான் என் தங்கையிடம் “நன்றியறிதல்” மலரை வைத்து வணங்கச் சொன்னேன். என்ன ஆச்சரியம்! என் குழந்தை நன்றாக பால் குடிக்க ஆரம்பித்தது. அப்பொழுது என் கண்ணில் நீர்த்துளிகளுடன் அன்னையை அழைத்து நன்றி தெரிவித்தேன்.

இன்று முதல் அவன் பால் குடிக்கும்பொழுதெல்லாம், நான் நன்றி தெரிவித்துக்கொண்டேயிருக்கிறேன்.

என் வீட்டில் உள்ள அனைவரும், என் கணவரும் குழந்தை இறந்துவிடும் என்று அழுதுகொண்டிருந்தார்கள். ஆனால், நான் மட்டும் உறுதியுடனும், நம்பிக்கையுடனும் அன்னையை மட்டும் வணங்கி, வேண்டிக்கொண்டிருந்தேன்.

அதன் விளைவு, என் குழந்தை மிகுந்த உடல் ஆரோக்கியத்தோடும், தெம்புடனும், அன்னையின் அருளுடன் மிகவும்

இன்பமாக இருக்கிறது. நானும், என் குழந்தையும் மிகுந்த நலத்துடன் இப்பொழுதும் இருக்கிறோம்.

அன்னை அன்பர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியும், மிகுந்த ஆனந்தமும் அடைகிறேன். நன்றி!

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இன்று மனிதன் இறைவனுக்கு எதிர்நிலையில் இருக்கிறான். கடவுளை நோக்கி அவன் செல்வது ஆர்வம் எனப்படும்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவனைத் தவிர வேறொன்றில் முடிவைக் காண்பது அறியாமை.

பணம், பதவி, அதுபோன்று முடிவாகத் தோன்றுவது உணர்ச்சியின் மாயை.

திருமணத்தையே முடிவாக நினைப்பது சமூக மாயையை ஏற்றுக்கொள்ளும் மனிதச் செயல்.

நட்பில் முடிவைக் காண முயல்வது உணர்ச்சியின் மாயையாகும்.

***நட்பும், திருமணமும், பணமும், பதவியும் முடிவல்ல.***

***முடிவற்றவனே முடிவு.***



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி – மனிதன் சிறியவன், விஷயங்கள் சிறியன. அப்படி இருக்கும்பொழுது பெரும் பணம், அளவுகடந்து, தொடர்ந்து வரும் என்பது புரியவில்லை. அத்துடன் ஏன் அப்படி வரவேண்டும், எதற்காக, எப்படி எனப் புரியவில்லை.

அண்ணன் – இது சமூகத்தைப் பற்றிய உண்மையில்லை. பிரம்மத்தை பற்றிய தத்துவம். சமூகத்தில் வெளிப்படும் அளவில்தான் நாம் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

தம்பி – பணம் தவிர வேறு விஷயத்தில் இத்தத்துவம் வெளிப்பட்டுள்ளதா?

அண்ணன் – எல்லா விஷயங்களுக்கும் இது உண்மை. பேச்சு, மொழி என்ற இடத்தில் மட்டும் தெளிவாக இதைக் காணலாம்.

உலகில் செயல்கள், அசைவுகள் நிகழ்கின்றன. நாம் பொருள்களைக் காண்கிறோம். மரம், செடி, கொடி, வீடு, ஆகியவற்றைக் காண்கிறோம். மனிதன் சிலவற்றை உற்பத்தி செய்கிறான். இயற்கை சிலவற்றை உற்பத்தி செய்கின்றது. அவை உற்பத்தியாகும் சட்டம் இது.

- **முதலில் ஓரளவு உற்பத்தியாகும்.**
- **பிறகு, ஒரு கட்டத்தைத் தாண்டிய பிறகு அபரிமிதமாக உற்பத்தியாகும்.**
- **அவை மனிதனின் உபயோகத்திற்கு என நாம் நினைப்பது சிறுபிள்ளைத்தனம்.**

* அப்படி உற்பத்தியாகும் பொருள்களில் சிலவற்றை மனிதன் பயன்படுத்துவதால் அவன் தன் கண்ணோட்டத்தில் அவற்றைக் கருதுகிறான்.
* நதியும், மலையும், தாவரங்களையும் இயற்கை மனிதனுடைய உபயோகத்திற்காக உற்பத்தி செய்யவில்லை. அவை சிருஷ்டியின் பகுதிகள்.
* ஒரு கட்டத்தைத் தாண்டியபின், உற்பத்தி அனந்தமாவது இயற்கை நியதி.
* நாம் மொழியில் இதைக் காணலாம்.
* இன்று பணத்தில் அத்தன்மை வெளிப்படுகிறது என நான் கூறுகிறேன்.

தம்பி – பிரம்மம் முழுமையானது, தன்னை முழுமையாகவே கொடுக்கவல்லது என்பதன்றோ இத்தத்துவம்?

அண்ணன் – இந்த விஷயத்தில் சமூகமும், பிரம்மமும் ஒன்றே. காற்று அபரிமிதமாக உள்ளது. மனிதன் சுவாசிக்க சிறிதளவு – ஒரு துளி – பயன்படுத்திக்கொள்கிறான். அதுபோல் மொழி உலகில் அபரிமிதமாக உள்ளது. இன்று மனிதன் ஓயாமல் பேசலாம், எழுதலாம், முடிவில்லாமல் உற்பத்தி செய்யலாம். தேவைப்படும் அளவுக்குப் பயன்படுத்திக் கொள்கிறோம். அதுபோல் எதிர்காலத்தில் பணம் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படும். தனி மனிதன் எந்த அளவு பணம் வேண்டுமென்றாலும் பயன்படுத்திக்கொள்ளலாம். தானே உற்பத்தி செய்துகொள்ளலாம். பிரம்மம் தன்னை முழுமையாகக் கொடுக்கிறது. நாம் நிலைக்குரியவாறு பகுதியாகப் பெறுகிறோம். சமூகம் முழு பணத்தைப் பெற்றுள்ளது. அதனால் பிரம்மம்போல் தன் முழு பணத்தையுமேதான் ஒருவருக்குக் கொடுக்க முடியும். பகுதியாகத் தர



சமூகத்தால் முடியாது. மனிதன் தன்னை பகுதிக்கு உட்படுத்திக்கொண்டால், அவனால் பகுதியை மட்டுமே பெற முடியும். விடுதலை பெற்ற மனிதன் சமூகத்தின் அத்தனைச் செல்வத்திற்கும் உரியவன். சமூகம் கொடுக்கத் தயாராக இருக்கிறது, கொடுக்கிறது. நாம் பெறத் தயாராகவேண்டும். காற்றையும், பேசும் மொழியையும் அப்படிக் கொடுத்துவிட்டது. இனி பணத்தை அப்படித் தரும் என்பதே தத்துவ விளக்கம்.

தம்பி – இத்தத்துவம் பணத்தைக் கடந்து மற்றவற்றிற்கும் பயன்படுமன்றோ?

அண்ணன் – அறிவு, உணர்வு, சந்தோஷம், புதுக் கருத்துகள், புது விளையாட்டுகள், என எந்த விஷயமும் எதிர்காலத்தில் அபரிமிதமாக உற்பத்தியாகும். இதை practical concept of infinity ஜடத்தில் அனந்தம் எனலாம்.

தம்பி – ஷேக்ஸ்பியரைப் பற்றி ஸ்ரீ அரவிந்தர் எழுதும்பொழுது, இலக்கியம் பேரிலக்கியமாவதை எழுதுகிறார். அங்கு இதைக் குறிப்பிடுகிறார். இயற்கை நோக்கத்தைத் துறந்தபின் சிருஷ்டியின் நிலை உயர்வதாக எழுதுகிறார். We touch here the bottom..... Nature's creativity becomes purposeless.

அண்ணன் – ஒரு காரணத்திற்காக உற்பத்தி செய்யும்வரை அளவோடு உற்பத்தி செய்கிறோம். காரணமேயில்லாமல் உற்பத்தி செய்வது அனந்தம். அப்பொழுது அனந்தமாக உற்பத்தி ஆகும் என இலக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பணத்தை நம் உபயோகத்திற்காக உற்பத்தி செய்யும்வரை பற்றாக்குறையிருக்கும். எந்தக் காரணமும் இல்லாமல் உற்பத்தி செய்தால், செய்வது அனந்தமானால், அளவு அனந்தமாகும். சமூகம், பிரம்மத்தை, பணத்தில் வெளியிட ஆரம்பித்துவிட்டால்,

இனி பணம் அபரிமிதமாக உற்பத்தியாகும். **அதன்பின் பிரம்மத்தைப்போல் சமூகத்தால் பணத்தை அளவுகடந்தே மனிதனுக்குத் தரமுடியும்.** அளவு, லிமிட், என்பவை பணத்திற்கு அதன்பிறகு இல்லை.

தம்பி - பிரம்மம் சக்தியாகி, ரூபமாகிறது. நாம் ரூபத்தைக் காண்கிறோம். ரூபத்தைக் கடந்து சக்தியைப் பார்த்தால் அளவு விரிவடைகிறது. சக்தியைக் கடந்து பிரம்மத்தைக் கண்டால், அது அனந்தமாகிறது.

அண்ணன் - அதுவே தத்துவம். நாம் பணத்தை ரூபாய், நோட்டு என்ற ரூபங்களில் காண்கிறோம். பணத்தை உற்பத்தி செய்த சக்தி இந்த ரூபங்களுக்குப் பின்னால் உள்ளது. அது பிரம்மாண்டமானது, பிரவாகமாக எழும். அந்த சக்தி உலகம் முன்னேறும்பொழுது அளவுகடந்து முன்னேறியுள்ளது. அதற்குப் பல காரணங்களுண்டு. அறிவு, விஞ்ஞானம், டெக்னாலஜி, ஆகியவை காரணம். முக்கியமாக இன்று கம்ப்யூட்டர் காரணம்.

தம்பி - கம்ப்யூட்டர் பணத்தை விரைவாக அனுப்புகிறது.

அண்ணன் - வேகம் பணத்தை விரிவுபடுத்தும்.

தம்பி - அது வியாபாரிக்குத் தெரியும்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உயர்ந்த நிலையைத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவருவது படைப்பு, சிருஷ்டி.





# இதுவோ உம் ரௌத்திரக் கருணை!

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

என்றுமில்லாத ஆனந்தம் அன்று அகத்தே கரைபுரண்டது. தான் எழுதிய அந்தத் தாளை அன்னை பெற்றது, புருவம் மேலேற அதை அன்னை பார்வையிட்டது, ஒரு புன்னகையை வீசி தன்னை வீழ்த்தியது, எல்லாமே மீண்டும், மீண்டும் நினைவில் எழுந்து மகிழ்வூட்டியவண்ணமிருந்தது. அகத்தின் மகிழ்ச்சி முகத்தில் பிரகாசம் தெரியச் செய்தது.

''உமாப் பெண்ணே! என்ன ஒரே பிரகாசம் முகத்தில்? அம்மாவின் கடிதத்தைப் பார்த்துவிட்டாயா, என்ன?'' என்றார் மாமா.

"கடிதமா? நானெதுவும் பார்க்கவில்லையே" என்றாள் உமா.

"உன் அம்மா நீ எப்போது சென்னை வரப்போகிறாய்? என்று கேட்டு எழுதியிருக்கிறாள்'' என்று தன் சகோதரியின் கடிதத்தை உமாவிடம் கொடுத்தார். உண்மையான அம்மாவைக் கண்டுபிடித்துவிட்ட உமாவுக்கு இந்தத் தற்காலிக அம்மாவின் கடிதம் ஆர்வமூட்டவில்லை.

"போங்கள் மாமா. நான் பிரெஞ்சு கற்றுக்கொண்ட பிறகுதான் ஊருக்குப் போவேன்'' என்று சிணுங்கினாள்.

"உன்னை யார் ஊருக்குப் போகச் சொன்னது, கடிதம் வந்தது என்றுதானே சொன்னேன்'' என்றார் மாமா.

அப்பாடி, இத்துடன் தப்பித்தோம் என்று எண்ணினாள்.

அன்று மீண்டும் ப்ரீத்தி வகுப்பிற்கு வரவில்லை. என்ன ஆயிற்று இந்தப் ப்ரீத்திக்கு? அடிக்கடி கட்டி வருவதும், காய்ச்சல் வருவதும் என்று எண்ணத் தொடங்கினாள். போய்ப் பார்க்கலாம் என்றால் வகுப்பு நேரத்தில் மாமா தன்னை வெளியே பார்க்க நேர்ந்தால் அன்றுடன் பாண்டிச்சேரி வாசம் முடிந்துவிடும் என்ற அச்சம் வேறு. எத்தனை இனிய செய்திகள் அன்னையைப் பற்றி அறிய முடிகிறது. இந்தச் சூழலைவிட்டுப் பிரிய அவளுக்கு விருப்பமில்லை.

> ***"அன்னையே! எனக்கும் உம்மருகே வர ஆவல்தான். ஆனால் இந்தப் பெரியவர்கள், கட்டுப்பாடு இவையெல்லாம் என்னைச் சூழ்ந்துகொண்டு உம்மை நெருங்கவிடாமல் செய்கிறதே. நீர்தாம் பராசக்தி என்றால் புராணங்களில் வருவதுபோல ஏதேனும் மாயம் செய்து என் வீட்டாரை மாற்றிவிட முடியாதா? நீர் ஏன் அப்படிச் செய்வதில்லை"***

என்று எண்ணியவண்ணமிருந்தாள்.

இன்று எப்படியும் வகுப்பிற்குப் போவோம். நாளைய நிலைமைக்கேற்ப ப்ரீத்தியைக் காணச் செல்வோம் என்று சமாதானம் செய்துகொண்டு வகுப்பிற்குச் சென்றாள். மறுநாள் ப்ரீத்தி வகுப்பிற்கு வந்தாள். அவள் முகத்தில் உடம்பின் இம்சை தெரிந்தது. ஏதோ அவளுக்கு உடல்நலக்குறை என்று தோன்றியது. ஒன்றும் பேசுமுன் ஆசிரியர் வந்துவிட்டார். எல்லோரும் வகுப்பில் ஆசிரியர் கூறிய பாடத்தைக் குறிப்பெழுதிக்கொண்டனர். ப்ரீத்தியின் பென்சில் கீழே விழுந்துவிட்டது. குனிந்து எடுப்பதற்கு அவள் சிறிது முயற்சி செய்தவுடனேயே 'ஆ' என்று லேசான வேதனைக் குரலுடன் குனிய முடியாமல் நிமிர்ந்துவிட்டாள்.

உமா குனிந்து பென்சிலை எடுத்துக் கொடுத்தாள். "ரொம்ப தாங்ஸ் உமா" என்றாள் மெல்லிய குரலில்.



"தாங்ஸ் இருக்கட்டும். உடம்புக்கு என்ன? குனிந்தவுடன் 'ஆ' என்று குரல் கொடுத்தாயே. வலித்ததா?" என்றாள் மிக மெல்லிய குரலில்.

'ஆம்' என்பதுபோல் தலையசைத்து, 'வகுப்பு முடியட்டும், பிறகு சொல்கிறேன்' என்று கண்ணால் ஜாடை செய்தாள்.

வகுப்பு முடிந்து மாணவிகள் வரிசையாய் வெளியேறி தத்தம் தோழிகளுடன் சேர்ந்து வீட்டிற்குச் செல்லத் தொடங்கினர்.

"மீண்டும் என்ன ப்ரீத்தி ஆயிற்று உனக்கு? ஏன் வகுப்பிற்கு வரவில்லை?" என்றாள் உமா.

"தலையில் கட்டி வந்துவிட்டது உமா. குனியவே முடியவில்லை. குனிந்தால் வலி. அதுதான் இரண்டு நாட்களாய் வாராதிருந்து விட்டேன்" என்றாள் ப்ரீத்தி.

"உன் டாக்டரிடம் இதைச் சொல்லவில்லையா?" என்று குறும்பாய்க் கேட்டாள் உமா. அவள் 'டாக்டர்' என்று அன்னையைக் குறிப்பிடுவது புரிந்து புன்முறுவல் செய்தாள் ப்ரீத்தி.

"சிரித்து மழுப்பாதே ப்ரீத்தி. அன்னையிடம் கட்டியைப் பற்றிச் சொன்னாயா? இல்லையா?" என்றாள் உமா.

"மீண்டும், மீண்டும் கட்டி என்றால் சொல்லவே என்னவோ போலிருக்கிறது. இம்முறை சொல்லாமல் பொறுத்துக்கொண்டு இருக்கிறேன்" என்றாள் ப்ரீத்தி.

"நீ சொல்லாவிட்டால் என்ன? அவர் கண்டுபிடித்துப் பாராட்டாமல் விடமாட்டார், பாரேன்" என்று (அவளைக் கடிந்துகொள்ளப் போகிறார் என்பதைப் பாராட்டு என்று) நகைச்சுவையாய்க் கூறினாள் உமா. "என்ன செய்வது உமா? இந்த ஜடம் விழித்துக்கொள்ளும்வரை பாராட்டித்தானே ஆகவேண்டும்" என ப்ரீத்தியும் நகைச்சுவையாய்க் கூற இருவரும் சிரித்தனர்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, வகுப்பில் உமாவின் கர்சிப் நழுவி கீழே விழ, உடனே ப்ரீத்தி குனிந்து அதை எடுத்துக்கொடுத்துவிட்டாள்.

"ஓ! பதிலுக்குப் பதிலா?" என்று முன்பு தான் பென்சில் எடுத்துக் கொடுத்ததற்குப் பதிலாக இன்று அவள் கர்சிப் எடுத்துக் கொடுத்ததாகக் கேலியாய்க் கூறினாள்.

''அன்று குனிய முடியவில்லை. இன்று குனிய முடிந்தது. அதுதான் காரணம்'' என்றாள் ப்ரீத்தி.

"ஓ! உன் விருந்தினர் (தலையிலிருந்த கட்டி) கதி என்ன ஆயிற்று ப்ரீத்தி? அவர்களைச் சிறிதும் மதிக்காமல் குனிந்து விட்டாயே'' என்று விளையாட்டாய் அவள் தலைக்கட்டியை விசாரித்தாள்.

"அதையேன் கேட்கிறாய்? நீ கூறியதுபோல்தான் ஆயிற்று. நேற்று அன்னையிடம் ஆசீர்வாதப் பூக்கள் வாங்கச் சென்றிருந்தேன் அல்லவா? குனியாமல் வாங்கிக்கொண்டு திரும்பியதை அன்னை கண்டுபிடித்துவிட்டார். தலையை அழுத்திப் பிடித்தார். அவ்வளவுதான், வலி பொறுக்காமல் கத்திவிட்டேன். "*கூடாது, கூடாது. இப்படி ஆகவே கூடாது*" என்று கர்ஜித்தார். யாரை அன்னை திட்டுகிறார் என்று பார்க்க எல்லோரும் வந்துவிட்டார்கள்".

"பாராட்டுக் கூட்டமே நிகழ்ந்துவிட்டது என்று சொல்" என்று கிண்டல் செய்தாள் உமா.

"அதையேன் கேட்கிறாய்? அந்தப் பாராட்டில் என் தலையில் வந்த கட்டியும், அது கொண்டுவந்த வலியும் காணாமற் போய்விட்டது. நான் நிம்மதியாக வீடு திரும்பினேன்" என்றாள் ப்ரீத்தி.

உமா மெய்மறந்த நிலையில் இருந்தாள்.



''என்ன உமா? நீ கேட்டாய் என்றுதானே ஒன்றுவிடாமல் சொல்கிறேன். நீ கவனிக்காமல் எங்கேயோ பார்த்துக்கொண்டு இருக்கிறாய்" என்றாள் ப்ரீத்தி.

"இல்லை ப்ரீத்தி. கவனிக்காமலும் இல்லை. எங்கோ பார்க்கவும் இல்லை. கவனமாக அன்னையின் பாராட்டுதல்களை எனக்குள் பார்த்து இரசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்கிறாள் உமா.

"உமா! இன்று மாலை, அன்னை என்னிடம் ஒன்று சொல்லப் போவதாய் கூறியிருக்கிறார்'' என்றாள் ப்ரீத்தி.

உடனே உமா ப்ரீத்தியின் கைகளைப் பிடித்துக்கொள்கிறாள். "ப்ரீத்தி! நீ மிகவும் அதிர்ஷ்டசாலி தெரியுமா? எனக்கும் அங்கு வந்துவிட ஆசைதான். என்னை ஏதோவொரு பயம் தடுக்கிறது. வீட்டினரை எதிர்த்து வெளியே வந்து பழக்கமில்லை. அவர்களோ அனுமதிக்கும் நிலையில் இல்லை" என்று மிகுந்த சோகத்துடன் கூறினாள்.

"கவலைப்படாதே உமா. உனக்கு அன்னைமீது இருக்கும் அன்பு வலுப்பட்டால் இடர்கள் யாவும் தாமே கழன்றுவிடும்".

"ஆமாம் ப்ரீத்தி! ஒவ்வொரு நாளும், அன்னையுடன் உன் அனுபவங்களை நீ கொண்டுவருவதைக் கேட்டுக் கேட்டு நான் அன்னைமயமாகி வருகிறேன். அதுவே என் ஆர்வமும். எனக்குச் சராசரி வாழ்வு சாத்தியமில்லைபோல் உணர்கிறேன். மனித உணர்ச்சிகளையே நான் இழந்துகொண்டிருப்பதாய் அறிகிறேன். அதனால் மற்றவரிடையே என்னிலை என்னவாகும் என்று அச்சமாகக்கூட இருக்கிறது ப்ரீத்தி. நான் முன்போல இல்லை என்று மாமிகூட வேதனைப்படுவதாய்த் தெரிகிறது".

''அட! இதுவா உன் கவலை. உண்மையில் நீ அன்னையை நெருங்கப் பூரணத் தகுதி உள்ளவள் என்று சந்தோஷப்படு. இப்படித் தன் மனம் எவர்மீதும் ஈடுபாடின்றி இருப்பதாய் ஓர் அன்பர்

அன்னையிடம் தெரிவித்தபோது அவர் என்ன மறுமொழி கூறினார் தெரியுமா? ''*என்வரையில் இதை நான் விலையில்லா அரியபொருளாகவே மதிக்கின்றேன்*'' என்றார்''.

''உண்மையாகவா ப்ரீத்தி? என்னுள் ஏதோ ரசவாதம் நடைபெற்றவண்ணமுள்ளது'' என்றாள் உமா.

"எல்லாம் நல்லதற்காகவே இருக்கும். கவலையை விடு" என்றாள் ப்ரீத்தி.

(**நீங்கள் எல்லோரும் என் குழந்தைகள். உங்கள் எல்லோரையும் பகவானிடம் அழைத்துச் செல்லவே என்னுள்ளத்தில் உங்களை ஏற்றிருக்கிறேன். நீங்கள் பகவானிடமிருந்து விலகிச் சென்றால் என்னுள்ளம் புண்படும் என்பதை உணர்வீர்களானால் அதுவொன்றே போதும் -** *ஸ்ரீ அன்னை*)

அன்று இரவு அன்னை ப்ரீத்தியை வரச்சொல்லி, சொல்லி அனுப்பினார். இன்று இரண்டு முறை தரிசனம், ஆசீர்வாதப் பூக்கள் பெறுதல், யாவும் நிகழ்ந்தன. மீண்டும் ஒரு தரிசனம். அது அன்னையே அழைத்துத் தருவது. மிகுந்த ஆர்வத்துடன் உடனே புறப்பட்டுச் சென்று அன்னையின் அறை வாயிலில் போய் தயாராய் நின்றுகொண்டாள் ப்ரீத்தி.

"*எஸ், கமின்*" என்கிறார் அன்னை.

மிகுந்த பரவசத்துடன் உள்ளே சென்றாள் ப்ரீத்தி. அன்னை அவளைப் புன்சிரிப்புடன் பார்த்தார். அந்தச் சிரிப்பின் தெய்வீகம் அவரை ஏற்றவர்க்கு வரப்பிரசாதம். மயங்கி நின்றாள் ப்ரீத்தி.

அன்னை தம் கையில் ஏதோவொரு தாள் வைத்திருக்கிறார். அது என்னவாக இருக்கக்கூடும் என்று யூகிக்க முடியாமல் திணறினாள்.



"*ப்ரீத்தி! இந்தா, இதை உன் தோழியிடம் கொடுத்துவிடு*" என்று தம் கையில் வைத்திருந்த, அந்த அட்டைபோல் சற்று தடித்த தாளைக் கொடுக்கிறார்.

அன்னையின் சமீபம், அவர் புன்னகை, அவரால் தான் அழைக்கப்பட்டது, போன்ற மயக்கங்களிலிருந்து விடுபடாத நிலையில், "சரியம்மா!" என்று மிகுந்த பணிவுடன் கூறுகிறாள். அதற்குள் அவருக்கு அடுத்த செய்தி ஒன்று வரவே ப்ரீத்திக்கு தலையசைத்து அனுமதி அளித்தார். ப்ரீத்தி தன்னிருப்பிடம் திரும்பினாள்.

என்ன கொடுத்திருப்பார்? புத்தகம்போல் இரண்டாக மடிக்கப்பட்ட அட்டையது. அதில் ஏதோ எழுதப்பட்ட செய்தி. செய்தியைச் சுற்றி பார்டர் கட்டப்பட்டிருக்கிறது. பூக்கள் வரையப்பட்டுள்ளது. ஒன்றும் புரியவில்லை. ஆகா, எந்தத் தோழியிடம் என்று பெயர் கேட்டுக்கொள்ளாதது எத்தனை முட்டாள்தனம். தன்னுடன் அச்சகத்தில் வேலை செய்யும் தோழியிருக்கிறாள், புத்தகப் பிரிவில் பணி செய்யும் தோழியிருக்கிறாள், தியானத்திற்கு, தரிசனத்திற்கு உடன்வரும் தோழியிருக்கிறாள், பிரெஞ்சுக் கிளாஸ் போனதில் அங்கும் ஒரு தோழியிருக்கிறாள். இதில் யாரிடம் இதைத் தருவது? இந்த அறியாமை நிறைந்த என் செயலை, உடனே தோழியின் பெயரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளாத என் மடமையை அன்னை மன்னிப்பாரா? என்று வருந்தினாள். புத்தகம் ஒன்றினுள் அந்தச் செய்தி அட்டையைப் பத்திரப்படுத்திவிட்டு பணிகளில் ஈடுபட்டவள் அதை மறந்தேபோனாள்.

பிரெஞ்சு வகுப்பில் நுழைந்தவுடன், மாணவிகளின் கலகலப்பான பேச்சொலி ஆசிரியர் வரவில்லை என்பதை உணர்த்தவே நிம்மதியாய்ப் போய் இடத்திலமர்ந்தாள்.

*தொடரும்.....*

❀❀❀

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.150 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | சத் புருஷன் | விஜயா & விசாலம்* | ரூ. 20 |

*சென்னையில் மட்டுமே கிடைக்கும்.

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# திருப்திப்படுத்த முடியாது

நாம் பிறர் இனிக்கப் பழக முயல்கிறோம். அது சில சமயங்களில் அடுத்தவரைத் திருப்திப்படுத்துவதாக அமையும். எப்படியாவது மனைவியைத் திருப்திப்படுத்த வேண்டும், தகப்பனாரை, நண்பரைத் திருப்திப்படுத்தவேண்டும் என்று முயன்றவர் வென்றதில்லை. எவரைத் திருப்திப்படுத்த முயல்கிறோமோ அவருக்கு நம் மீது அதிருப்தி ஏற்படும், மனஸ்தாபம் வரும், எதிரியாவர். “உன்னைச் சமாதி கட்டிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்'' என்பார். இவையெல்லாம் எளியவர்களிடம் நடக்கும். ஒரு கட்டத்தில் பிரச்சினை மனிதனைக் கடந்து வாழ்வுக்குப் போகும். உன் கீழ் வேலை செய்யும் குமாஸ்தாவைத் திருப்திசெய்ய முயன்றால் அவன் மானேஜரை மட்டம் தட்டுவான். ஆபீஸ் சட்டத்திற்கு எதிராக நடப்பான். உன்னையே அழிக்க ஆசைப்படுவான்.

- **அடுத்தவரைத் திருப்திப்படுத்த முடியாது, கடமையை மட்டும் செய்யலாம்.**
- **தாயாரைத் திருப்திப்படுத்தலாம், தகப்பனாரைத் திருப்திபடுத்தலாம். இருவரையும் திருப்திப்படுத்த முடியுமா? அவர்களுக்குள் பேதம் வந்தால் என்ன செய்வாய்?**
- **மானேஜரைத் திருப்திப்படுத்த முயன்ற முதலாளியை அவன் கம்பெனி ஆரம்பிக்கும் முன்னரே, "எனக்குக் கம்பெனியைக் கொடுத்துவிடுங்கள்" என்றான்.**
- **சுயநலமிக்கு இப்பிரச்சினைகள் எழா. நல்லவர் படும் பாடு இவை.**

❀❀❀

# சுபாவம்

- **பிறப்பில் அமைந்தது.**
- **பிரம்மம் சுயரூபத்தை சுபாவத்தால் வெளிப்படுத்துவது சிருஷ்டி.**
- **சுபாவம் மாறாது என்பது கீதை.**
- **மாறாத சுபாவத்தையொட்டி செய்யும் யோகம் சுபாவத்தைத் திருவுருமாற்றும் என்பது ஸ்ரீ அரவிந்தம்.**
- **ரூபம் மனத்திற்குரியது; பாவம் உணர்வுக்குரியது. சுயரூபம், சுபாவத்தால் வெளிப்படுவது மனித இயற்கை. அதுவே அவன் வாழ்வை நிர்ணயிக்கிறது.**
- **நான் தரித்திரமாகப் பிறந்தால் எனது சுபாவம் தரித்திரம். இது திருவுருமாறினால் அதிர்ஷ்டமாகும். தரித்திரம் என்ற சுபாவம் கோபம், சோம்பேறித்தனம், சிக்கனம், அல்பம், சிடுமூஞ்சி போன்ற குணங்களால் வெளிப்படுவது. சாந்தம், சுறுசுறுப்பு, தாராளம், பெருந்தன்மை, இனிமை அதிர்ஷ்டத்தை வெளிப்படுத்தும் குணங்கள். தரித்திரத்திற்குரிய குணங்களை, அதிர்ஷ்டத்திற்குரிய குணங்களாக மாற்றினால் தரித்திரம் அதிர்ஷ்டமாகும். நம்மால் அதைச் செய்ய முடியாது. அன்னையைச் சரணடைந்தால் அவர் நம் தரித்திரத்தை அதிர்ஷ்டம் ஆக்குவார்.**
- **பரம்பரையாகத் தரித்திர ராசி பெற்ற குடும்பம். அவ்வீட்டார் போகுமிடங்களெல்லாம் தரித்திரம் பற்றிக்கொள்ளும். அவ்வீட்டு மனிதனால் தரித்திரம் பெற்றவர் அன்னை வீட்டை அடைந்து, தான் பெற்ற தரித்திரத்தை இழந்து, அவ்வீட்டு மனிதனை அன்னைக்கு அறிமுகப்படுத்தியதால்,**
  - *தரித்திரம் திருவுருமாறி அதிர்ஷ்டமாயிற்று.*
  - *எத்தனை ரூபாய் சம்பளமாகப் பெற்றாரோ, அத்தனை கோடி சம்பாதித்தார்.*

❀❀❀